வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 08.08.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 220 பக்கங்கள் : 12

# மன்னார் காற்றாலை திட்டத்தை இடைநிறுத்துவதற்கு தீர்மானம்!

## அமைச்சர் தலைமையிலான கூட்டத்தில் எட்டப்பட்டது

கொழும்பு, ஓகஸ்ட் 08

**மன்னார் காற்றாலை மின் திட்டத்தை இடைநிறுத்த மின் சக்தி அமைச்சர் தலைமையில் நேற்று பாராளுமன்ற அறையில் நடந்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.**

மேலும், திட்டத்தை எதிர்க்கும் தரப்புகளுடன் பேச்சு நடத்தி இந்த விடயத்துக்குத் தீர்வு எட்டுவது என்றும் இரு வாரங்களின் பின்னர் ஜனாதிபதி தலைமையில் விசேட பேச்சு ஒன்றை நடத்துவதற்கும் இதன்போது இணக்கம் காணப்பட்டது.

மன்னாரில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள காற்றாலை மின் திட்டம் மற்றும் இல்மனைட் மண் அகழ்வுக்கும் பெருமளவில் எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில், இவை தொடர்பில் மின் சக்தி அமைச்சர் அருண கருணாதிலக தலைமையில் பாராளுமன்றத்தில் கலந்துரையாடல் ஒன்று நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு உட்பட பல தரப்பினர் பங்கேற்றனர்.

இதன்போது, காற்றாலை மின் திட்டத்தால் மன்னார் மாவட்டத்தில் மனித மற்றும் இயற்கை வாழ்விடங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் அத்துடன், திட்டத்தின் ஆரம்ப பணிகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் மன்னாரை 11



வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவில் நேற்று திருமஞ்சத்தில் முருகப்பெருமான எழுந்தருளி அருள்பாலித்த காட்சி...!
படம் - ஐ. சிவசாந்தன்

# சஜித் எதிர்க்கட்சி தலைவராக இருக்கும்வரை நமது ஆட்சியே

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி

கொழும்பு, ஓக. 08

சஜித் பிரோமதாஸ எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்வரை திசைகாட்டி வசம் அரசாங்கம் இருக்கும் என்று மக்கள் கூறுகின்றனர் என்று கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கார்ட்டூன் திரைக்கதையில் வரும் வரும் செள செள போன்றவர். அதன் ஒரே வேலை 11

# கடற்கரையில் இளைஞனின் சடலம் மீட்பு

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 08

அச்சுவேலி - அக்கரை கடற்கரையில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று கரையொதுங்கியது.

வடமராட்சி - கரணவாயை சேர்ந்த இளைஞரின் சடலமே நேற்று வியாழக்கிழமை மாலை இவ்வாறு கரையொதுங்கியது.

மீட்கப்பட்ட சடலம் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு உடற்கூராய்வு பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# ஊடகவியலாளர் குமணனை விசாரிக்க அழைத்தது ரி.ஐ.டி

முல்லைத்தீவு, ஓக.08

ஊடகவியலாளர் க. குமணன் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 17ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு அளம்பில் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்து, பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவு பொறுப்பதிகாரியை சந்திக்குமாறு அவருக்கு வழங்கப்பட்ட அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 11

# மட்டக்களப்பு, யாழ்ப்பாணத்தில் ஓகஸ்ட் 30 அன்று போராட்டங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 08

தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வு கோரியும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கேட்டும் எதிர்வரும் 30ஆம் திகதி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான ஓகஸ்ட் 30ஆம் திகதியை நினைவுகூரும் விதமாகவே இந்தப் போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வடக்கில் யாழ்ப்பாணத்திலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் 11

# ஓடிக்கொண்டிருந்த ரயிலில் ஏறிய யுவதி காலை இழந்தார்

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஓக. 08

ஓடிக்கொண்டிருந்த ரயிலில் ஏறமுயன்ற யுவதி ஒருவர் கால் ஒன்றை இழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

குறித்த யுவதி ரயிலில் பயணிப்பதற்காக காங்கேசன்துறை ரயில் நிலையத்துக்கு வந்துள்ளார். அவர் வந்தபோது ரயில் புறப்பட்டுக் 11

# அமெரிக்காவின் 20 வீத வரி குறைப்பு இன்னமும் இறுதி செய்யப்படவில்லை

## பாராளுமன்றில் தெரிவித்தார் ஜனாதிபதி



கொழும்பு, ஓக. 08

இலங்கை பொருட்களுக்கு 20 சதவீதமாக அமெரிக்கா அறிவித்த வரி குறைப்பு இன்னமும் இறுதி செய்யப்படவில்லை என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்துக்கு நேற்றைய தினம் வருகை தந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் விசேட உரையாற்றினார். இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கைமீது அமெரிக்கா விதித்த பரஸ்பர தீர்வை வரியை 20 சதவீதமாகக் குறைப்பதற்கான எந்த ஒப்பந்தமும் இறுதி செய்யப்படவில்லை. எனினும், வரி குறைப்பு தொடர்பில் 11

# 15 தமிழ் அரசியல் கைதிகள் பொது மன்னிப்பு கோரிக்கை

## நீதி அமைச்சர் ஹர்சன

கொழும்பு, ஓக. 08

தமிழ் அரசியல் கைதிகளில் சுமார் 15 பேர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இது விடயத்தில் என்னால் உத்தரவாதம் வழங்க முடியாது. ஜனாதிபதியே தீர்மானம் எடுக்க வேண்டும். சாதகமான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன் - இவ்வாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கிளிநொச்சியில் அதிகளவில் துப்பாக்கி தோட்டாக்கள் மீட்பு

கிளிநொச்சி, ஒக. 08

கிளிநொச்சி - புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம் அருகாமையில் ஏராளமான துப்பாக்கி தோட்டாக்கள் மீட்கப்பட்டன.

நேற்று காலை பாடசாலையின் அருகே அதிக ளவான தோட்டாக்கள் சந்தேகத்துக்கிடமான முறையில் சிதறிக் காணப்பட்டன. இது தொடர்பில் பாடசாலை நிர்வாகம் உடனயாக பொலிஸாருக்கும் இராணுவத்துக்கும் அறிவித்தது.

இதையடுத்து, சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் சிதறிக் கிடந்த தோட்டாக்களை மீட்டனர். இதன்போது, 150இற்கும் மேற்பட்ட துப்பாக்கி தோட்டாக்கள் மீட்கப்பட்டன.



இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-05)

# யாழ். பல்கலை. ஆங்கில மொழி துறையின் முதலாவது மாநாடு திங்களன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஒக. 08

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் துறையின் முதலாவது சர்வதேச மாநாடு எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகிறது. இந்த மாநாடு தொடர்ந்து மூன்று தினங்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இதில், அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகம், நியூசலாந்து ஒக்லாண்ட் பல்கலைக்கழகம், லண்டன் பல்கலைக்கழகம், ஹொங்கொங் பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் இருந்து வருகை தரும் பேராசிரியர்கள் உரையாற்றவுள்ளனர்.

'ஆங்கிலத்தின் காலனிய நீக்கம்' பற்றியதான கருப்பொருளில் நடத்தப்படும் இந்த மாநாடு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவின் முன்னாள் தலைவரும் தற்போது பென்சில்வேனியா பல்கலைக்கழகப் பேராசிரியராக பணியாற்றுபவருமான கலாநிதி சுரேஷ் கனகராஜாவின் ஒழுங்கமைப்பு - வழிகாட்டலில் நடைபெறவுள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையிலும் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம், ஆங்கில மொழி கற்பித்தல் துறைத் தலைவர் கலாநிதி கி. சண்முகநாதன் ஆகியோரின் இணை தலைமையிலும் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த மாநாட்டில் 96 ஆய்வுக்கட்டுரைகள் பல்வேறு நாட்டு ஆய்வாளர்களாலும் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (ஐ)

# திருகோணமலை ஆலயங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் நிதியுதவி

வடமராட்சி, ஒக. 08

திருகோணமலை, கிண்ணியாவில் அமைந்துள்ள உப்பாறு சித்தி விநாயகர் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, ஆலய புனருத்தாரண பணிக்காக நிர்வாகத்தினரிடம் ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது.



திருகோணமலை, திரியாயில் கல்லம்பத்தை தஞ்சை விநாயகர் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக ஆலய புனருத்தாரணப் பணிக் காக நிர்வாகத்தினரிடம் 2 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப் பட்டது.

திருகோணமலை, பூம்புகார் கிழக்கு பிரிவில் அமைந்துள்ள பாலையூற்று சிறீ முத்துமாரி அம்மன் ஆலய கோரிக்கைக்கு அமைவாக ஆலய புனருத்தாரணப் பணிக்காக நிர்வாகத்தினரிடம் ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனை தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று உதவிகளை வழங்கி வைத்தார். (ஐ-02)

# யானை தாக்கி வவுனியாவில் ஒருவர் மரணம்

வவுனியா, ஒக. 08


காட்டு யானை தாக்கியதில் ஒருவர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

பெரியதம்பனை பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தவரையே வீதியில் நின்ற காட்டு யானை தாக்கியது. இதில், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

நட்டாங்கண்டல் பிரதேசத்தைச் சேர்ந்த ச. உதயராசா என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார். அவரின் சடலம், பண்டிவிரிச்சான் மருத்துவமனையில் வைக்கப் பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பறையனாலங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10)

# “கலைஞனின் குரல்” மாத இதழ் வெளியீட்டு விழா நடைபெற்றது



யாழ்ப்பாணம், ஒக. 08

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் மாதாந்த பத்திரிகை “கலைஞனின் குரல்“ வெளியீட்டு நிகழ்வு மன்றத்தின் தலைவர் இரா. மதிகரன் தலைமையில் கடந்த புதன்கிழமை பாஷையூரில் நடைபெற்றது.

இதில், ஆசியுரையை கலாபூசணம் செ. யோசெப்பாலா, வெளியீட்டுரையை கொழும்புத்துறை சென். யோசேப் வித்தியாலய ஆசிரியர் மேரி கொன்சலா கிங்ஸ்லி றொபேட், சிறப்புரைகளை மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும் “காந்தீயம்“ பத்திரிகை ஆசிரியருமான எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி, யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கிருஷ்ணகுமார், ஓய்வுநிலை ஆசிரியர் கருணாகரன், அறிவொளிக்கலை ஆசிரியர் இ. வைசாளன் ஆகியோரும் நிகழ்த்தினர்.

முதற்பிரதியை யாழ். மாவட்ட செயலக புள்ளிவிபர கிளை பிரதி பணிப்பாளர் மனுவல் வித்தியானந்தநேசன் பெற்றுக்கொண்டார். இந்த நிகழ்வில் பலர் பங்கேற்றனர். (ஐ)

# விபத்தில் உயிரிழந்தவர் நினைவாக பரந்தனில் விழிப்புணர்வு பதாதை!



கிளிநொச்சி, ஒக. 08

பரந்தன் நகரில் அண்மையில் நடந்த விபத்தில் இளம்பெண் ஒருவர் உயிரிழந்தார். அவரின் நினைவாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக அந்தப் பகுதியில் பதாதை ஒன்று கட்டப் பட்டுள்ளது.

அந்தப் பதாதையில் “ சாரதிகளே... சாலை விதிகளை கடைப்பிடியுங்கள் - விபத்துகளை தவிர்த்திடுங்கள். இப்படி ஒரு உயிர்ப்பலி இனி நிகழக் கூடாது எங்கள் யதுகிரியின் உயிர் பலியே இறுதிப் பலியாய் இருக்கட்டும்", என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை பரந்தன் நகரில் மோட்டார் சைக்கிளை டிப்பர் மோதிய விபத்தில் சந்திரசேகரம் யதுகிரி என்ற இளம்பெண் உயிரிழந்தார் என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

# பழைய மாணவர்களால் கதிரைகள் அன்பளிப்பு!



வவுனியா, ஒக. 08

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர்களால் 30 வளவாளர் கதிரைகள் அன்பளிப்பாக நேற்று வழங்கப்பட்டன.

சுமார் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான இந்தக் கதிரைகளை 2000ஆம் ஆண்டு சாதாரண தரம், 2003ஆம் ஆண்டு உயர்தரம் கற்ற மாணவர்கள் வழங்கினர்.

இதேசமயம், பாடசாலையின் மதிலுக்கு வர்ணம் பூசப்பட்டது. பழைய மாணவர் செரோன் இதற்கான உதவியை வழங்கியிருந்தார். இதையடுத்து, இந்த மதிலில் மாணவர்கள் ஓவியம் வரையும் செயல்பாடும் நேற்று ஆரம்பமானது.

குறித்த நிகழ்வில் பாடசாலை அதிபர் லோகநாதன், பழைய மாணவர் சங்கத் தலைவர் க.ஹரிப்பிரசாத், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ-10)

# இறம்பைக்குளம் மகளிர் ம. வியின் 135 ஆண்டு நிறைவில் நடைபவனி

வவுனியா, ஒக. 08

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் 135ஆவது ஆண்டைக் கொண்டாடும் முகமாக பாடசாலை நிர்வாகத்தின் அனுசரணையோடு பழைய மாணவிகளின் ஏற்பாட்டில் நடைபவனி நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை பாடசாலை முன்றலில் இருந்து ஆரம்பமாகும் இந்த நடைபவனி வவுனியா மணிக்கூட்டு கோபுரத்துக்கு சென்று அங்கிருந்து கடை வீதி வழியாக அந்தோனியார் ஆலயத்தை சென்றடைந்து பாடசாலையின் பிரதான நுழைவாயிலில் நிறைவடையும்.

தொடர்ந்து, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை விளை யாட்டு நிகழ்ச்சிகளும் 16ஆம் திகதி சனிக்கிழமை கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
08.08.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 23

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சஜித் இருக்கும்வரையில் ஜே.வி.பி.

"சஜித் பிரேமதாஸ எதிர்கட்சித் தலைவராக இருக்கும் வரையில் நாங்கள் ஆட்சியிலிருப்போம்", என்று ஜே. வி. பியின் முக்கியஸ்தரும் அமைச்சருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்திருக்கிறார். எதிரணி பலவீனமாக இருப்பதையும் எல்லாவற்றையும் எதிர்ப்பதைத் தவிர அவர்கள் எதனையும் செய்வதில்லை என்னும் அடிப்படையில்தான் மேற்படி கருத்தை அவர் தெரிவித்திருக்கிறார். சஜித் பற்றி அவர் கூறுவது சரியா அல்லது தவறா என்பதற்கு அப்பால் எதிர்க்கட்சி பலவீனமாக இருந்தால் ஆளும் தரப்புக்கு சவால்கள் இருக்கப் போவதில்லை என்பது உண்மைதான்.

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியில் இருப்பதில் பயனில்லை என்னும் அடிப்படையில்தான் சஜித் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி உருவாகியது. ரணிலுடன் இருந்தால் தங்களால் அதிகாரத்துக்கு வரமுடியாது என்று கருதியவர்கள் அனைவரும் சஜித்துடன் சென்றனர். ஆனாலும், சஜித் பிரேமதாஸவால் வெற்றிபெற முடியவில்லை. கோட்டாபய ராஜபக்ஷவின் எழுச்சிக்குப் பலியாகிப்போன சஜித் பிரேமதாஸ பின்னர், அநுர குமார திஸநாயக்கவின் எழுச்சியின் போதும் தோல்வியைத் தழுவினார். அவரை நம்பிச் சென்றவர்கள் அதிருப்தியுடன் இருக்கும் நிலைமையே காணப்படுகிறது.

இலங்கையின் வரலாற்றில் எதிரணிகள் எப்போதெல்லாம் மிகவும் பலவீனமாக இருக்கின்றனவோ அப்போதெல்லாம் ஆளும் தரப்பின் அதிகாரம் தறிகெட்டுப் பயன்பட்டதே வரலாறு. தேசிய மக்கள் சக்தி விடயத்தில் இதுவரையில் அவ்வாறான அசைவைக் காண முடியவில்லை. ஆனால், அவ்வாறான நிலைமை ஏற்படாது என்று ஆரூடங்களையும் கூறிவிட முடியாது.

ஏனெனில், இலங்கையின் கடந்த காலம் எந்தவொரு தென்னிலங்கைக் கட்சியையும் அளவுகடந்து நம்பிவிடுவதற்கான வாய்ப்புகளை விட்டு வைக்கவில்லை. அனைத்துக் கட்சிகளுமே தங்களுக்குக் கிடைத்த வாய்ப்புகளைத் தவறவிட்ட வரலாறே தென்னிலங்கையின் வரலாறாக இருக்கிறது. தமிழர் தரப்புகளைப் பொறுத்தவரையில் தங்களின் ஆற்றலை மிகைப்படுத்திப் புரிந்து கொண்டதன் விளைவாக வாய்ப்புகளைத் தவறவிட்டனர். ஆனால், தென்னிலங்கையோ தங்களின் அதிகாரத்தை ஆக்கபூர்வமான வகையில் - நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு பயன்படுத்தத் தவறினர்.

இந்த இடத்தில் தமிழர்கள் எதிர்ப்பு அரசியலை மேற்கொண்ட போதிலும்கூட, பாராளுமன்ற ஜனநாயகத்தின் கீழ் இரண்டு முறை எதிர்க்கட்சித் தலைமையைக் கைப்பற்றியிருக்கின்றனர். அமிர்தலிங்கத்தின் காலம் மிகவும் சவாலானது. அந்தக் காலத்தில் தமிழர்களுக்கான எதிர்க்கட்சியாக செயல்பட வேண்டிய கடப்பாடே மேலோங்கியிருந்தது. இந்தக் காலத்தில் தனது எதிர்க்கட்சித் தலைமையை வைத்து புதுடில்லியுடனான தொடர்புகளை அமிர்தலிங்கம் பலப்படுத்தியிருந்தார். அத்துடன், தனக்குள்ள வாய்ப்பைப் பயன்படுத்தி தமிழர் விவகாரத்தை சர்வதேச மயப்படுத்தும் பொறுப்பையும் தன்னால் முடிந்தளவு செய்ய முயன்றார். ஆனால், சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வெறுமனே சம்பந்தனின்அந்தஸ்துக்கான பதவியாகவே சுருங்கிப் போனது. சம்பந்தன் தமிழர்களுக்காகவும் அதனைப் பயன்படுத்தவில்லை - அதேவேளை நாட்டின் எதிர்க்கட்சித் தலை வராகவும் செயல்படவில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் சஜித் பிரேமதாஸவின் எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பு என்பது ஆளும் தரப்புக்கு சவாலற்ற ஒன்றாகவே தொடர்கிறது. ஒருவேளை சஜித்தின் இடத்தில் ரணில் விக்கிரமசிங்க இருந்திருந்தால் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் கடுமையான சவால்களை சந்தித்திருக்கும்.

## ஜனாதிபதி குறித்து வதந்தி; சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு, ஓக. 08

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் சமூக ஊடகங்களில் பரவி வரும் காணொலிகள் மற்றும் பதிவுகள் குறித்து முறையான விசாரணை நடத்தக் கோரி குற்றப் புலனாய்வு பிரிவிடம் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி அகலங்க உக்வத்தே, ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பிரகாரம் இந்த முறைப்பாட்டை செய்துள்ளார். குறித்த பதிவு, ஜனாதிபதியின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கக் கூடிய உள்ளடக்கத்தை கொண்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

ஊடகங்களுக்கு உரையாற்றிய அவர், ஒரு பெண் மற்றும் ஜனாதிபதி தொடர்பாக சமூக ஊடகங்களில் பகிரப்படும் காணொலிகள், படங்கள் மற்றும் பிற பதிவுகள் குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரினார் என்று கூறினார்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் தான் இந்த முறைப்பாட்டை பதிவு செய்ததாகவும், இந்தச் செய்தி மற்றும் தொடர்புடைய தகவல்கள், சமூக ஊடகக் கணக்குகள் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

மேலும், முற்றிலும் ஆதாரமற்ற இந்தப் பதிவுகள் சமூகத்தை தவறான பாதையில் வழிநடத்தக்கூடும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## 3ஆம் தவணைக்காக ஓக. 18இல் பாடசாலைகள் மீளத் திறக்கப்படும்

கொழும்பு, ஓக. 08

தமிழ், சிங்கள பாடசாலைகளின் இரண்டாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் நேற்றுடன் நிறைவடைந்தன என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

விடுமுறையின் பின்னர் எதிர்வரும் 18ஆம் திகதி 3ஆம் தவணைக்காக பாடசாலைகள் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, முஸ்லிம் பாடசாலைகளுக்கான இரண்டாவது தவணை எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நிறைவடையும். மூன்றாம் தவணை 25 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முழுநிலா சிறுவர் அரங்கம்

யாழ்ப்பாணம், ஓக. 08

இணுவில் அறிவாலயத்தின் ஏற்பாட்டில் முழுநிலா சிறுவர் அரங்கம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இணுவில் அறிவாலய அரங்கில் நடைபெறவுள்ளது.

செல்வி காருண்யா புஷ்கரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் 2024 தேசிய நாடக விழாவில் 4 விருதுகளை வென்ற எங்கே போனார் எலியார், எங்கே எங்கே குடை எங்கே ஆற்றுகை செய்யப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் உலகக் கிண்ண சதுரங்க போட்டியில் பதக்கம் வென்ற செல்வி கஜிஷனா தர்சஷன் பிரதம விருந்தினராக பங்கேற்பார்.

## ஏ-9 வீதியில் விபத்து; 6 பேர் படுகாயம்!

கொழும்பு, ஓக. 08

கண்டி- யாழ்ப்பாணம் ஏ-9 வீதியில் வான் ஒன்று கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் ஆறு பேர் காயங்களுக்கு உள்ளாகினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை அநுராதபுரத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வாகனத்தில் 8 பேர் பயணித்த நிலையில் சாரதி உட்பட 6 பேர் காயங்களுக்கு உள்ளாகினர். காயமடைந்தவர்கள் அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்கள் களுத்துறை - மத்துகம பகுதியிலிருந்து சுற்றுலா வந்தவர்கள் என்றும் வானின் பின் சில்லில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறே விபத்துக்குக் காரணம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## நல்லூர் ஆலய சூழலில் இன்று!


யாழ்ப்பாணம், ஓக. 08

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசைய ரங்கு இன்று மாலை 6.45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்காதேவி மணி மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

இசையரங்கில், பாட்டு - ஜெகதீஸ் வரன் மதுசிகன், வயலின் - இராசரத்தினம் நிறோசன், மிருதங்கம் - ஞானவேல் வசந், கெஞ்சிரா - விமலசிங்கம் இராக வன், மோசிங் - நித்தியானந்தம் மோகன தர்சன் இடம்பெறும்.

நாட்டிய அரங்கில் பரத சிவாலய மாணவர்களின் நடனம், நட்டுவாங்கம் - திருமதி பிரசாந்தினி பிறேமச்சந்திரன், பாட்டு - திருமதி சிவறஞ்சினி றமண சர்மா, மிருதங்கம் - வரதராஜ சர்மா றமண சர்மா, வயலின் - றமண சர்மா லயசர்மா. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மனதில் இனம்புரியாத பயம் வந்துப் போகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். அதிகாரிகளுடன் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

**மிதுனம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் வரும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**சிம்மம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். புதுதொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**கன்னி**
பால்ய நண்பர்கள் ஒருவரை சந்திப்பீர்கள். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் மாறுபட்ட அணுகுமுறையால் லாபம் ஈட்டுவீர்கள். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். விவாதங்களில் வெற்றி பெறும். நாள் இல்லை.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் அன்பு ஆதரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கை வரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன்அளவாக பழகுங்கள். பொறுமைதேவைப்படும்.

**மகரம்**
எடுத்த வேலைகளை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் பிரச்னைகள் உருவாகும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். ஆதாயம் தரும் நாள்.

**கும்பம்**
எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**மீனம்**
கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். உறவினர் நண்பர்களால் நன்மை உண்டு. வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். சக ஊழியர்களால் மதிக்கப்படுவீர்கள். சாதிக்கும் நாள்.

# நல்லூரில் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக. 08

நல்லூர் உற்சவகாலப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் 11ஆம் நாள் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

வேதாந்த மடம், சிறீ சிவகுரு நாத பீட 8 ஆவது குருபீடாதிபதி சிறீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க,

அராலி, வண்ணபுரம் சிவன் ஆலயப் பிரதமகுரு சிவசிறீ எஸ். சிறீகோபாலக்குருக்களின் தலைமையில் இந்தத் திருக்கூட்ட நிகழ்வு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் ச. கிருஸ்னேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இலங்கைப் பாராளுமன்ற ஆராய்ச்சி உத்தியோகத்தர் விஸ்வலிங்கம் முரளிதாஸ் சிறப்பு விருந்தினராகவும் கௌரவ விருந்தினர்களாக யாழ். செட்டித்தெரு மெதடிஸ்மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் கந்தசாமி சசிகரனும் யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபைச் செயலாளர், சே. செல்வராஜனும், துரவடிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலைப் பொறுப்பாசிரியர் திருமதி கமலாதேவி சபாரத்தினமும் தலையாழி ஞான வைரவர் ஆலயச் செயலாளரும் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலய ஓய்வுநிலை அதிபருமான மகேசன் கஜேந்திரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.


கலை நிகழ்வுகளை நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் சைவ பரிபாலன சபை அறநெறிப் பாடசாலை மற்றும் தலையாழி ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கவுள்ளனர்.

வரவேற்புரையை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள நல்லூர் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ர. நகுலா வழங்கவுள்ளார்.

சிறப்பு நிகழ்வுகளாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வளவாளர் நாகராஜா சனாதனன் “வேலன் வருகை” என்ற தலைப்பில் நிகழ்த்தும் சிறப்புச் சொற்பொழிவும் திருமதி சியாமலா பாலகிருஷ்ணனின் மாணவர்கள் வழங்கும் இசைக் கச்சேரி நிகழ்வும் விஜய குமார் வத்சாங்கிதசர்மாவின் இசை அரங்கும் நடைபெறவுள்ளது.

(எ)

# ஒற்றுமையாக முன்னோக்கிப் பயணம் வவுனியாவில் இளையோர் நடைபவனி




வவுனியா, ஓக. 08

இளைஞர்கள் ஒற்றுமையாக முன்னோக்கிப் பயணிக்கின்றனர் என்பதை வலியுறுத்தி வவுனியாவில் விழிப்புணர்வு நடைபவனி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நடைபவனியானது வவுனியா தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தில் ஆரம்பமாகி கண்டி வீதியின் ஊடாக வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் நிறைவடைந்தது.

வவுனியா இளைஞர் சேவைகள் சம்மேளனம் இந்த நடைபவனியை ஏற்பாடு செய்திருந்தது.

இளைஞர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் காப்போம் இயற்கையையும் எதிர்காலத்தையும், இளைஞர் கழகம் ஒற்றுமையுடன் முன்னோக்கி, போன்ற பல்வேறு பதாகைகளை தாங்கியவாறு இந்த நடைபவனி நடைபெற்றது.

இதன்போது மாகாண இளைஞர் சேவைகள் பணிப்பாளர், வவுனியா மாவட்ட பணிப்பாளர் உட்பட இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்கள், சம்மேளனத் தலைவர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(எ-10)

# பொது போக்குவரத்து தொடர்பிலான முறைப்பாட்டு இலக்கம் அறிமுகம்



யாழ்ப்பாணம், ஓக. 08

ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமைய பொதுப் போக்குவரத்தில் பொது மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் மற்றும் இடர்பாடுகளை முறையிடுவதற்கான இலக்கம் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் அறிமுகம் செய்யப்பட்டது.

குறித்த 0719090900 இலக்கத்துக்கு குறுந்தகவல் (எஸ். எம். எஸ். - மற்றும் வட்ஸ்அப்) மற்றும் 021 228 5120 நிலையான தொலைபேசி இலக்கங்களை உள்ளடக்கிய விழிப்புணர்வு ஸ்ரிக்கரை பேருந்துகளில் ஒட்டும் நிகழ்வு மாவட்டச் செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரனால் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் எஸ். கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் இ சுரேந்திரநாதன் மற்றும் உதவி மாவட்டச் செயலாளர் உ. தர்சினி, ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(எ-05)

# நல்லை ஆதீனத்தில் இன்று தெய்வீக கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக. 08

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் கடந்த 29 ஆம் திகதி எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10. 00 மணிக்கு “தெய்வீகக் கலை அர்ச்சனை” நிகழ்வை நடத்தி வருகிறது. அந்த வகையில் இன்று வெள்ளிக்கிழமை சுழிபுரம் யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை ஆசிரியர், மாணவர்களின் பஜனை நிகழ்வும் ஈ. நவிஷாவின் “கந்தபுராணத்திற் குரு” என்னும் விடயப்பொருளில் ஆன்மீகவுரையும் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசபந்துவை பதவி நீக்கும் வாக்கெடுப்பு

# சபையிலிருந்து மாயமான 30 எதிர்க்கட்சி எம்.பிக்கள்!

கொழும்பு, ஒக. 08

**தேசபந்து தென்னக்கோனை பதவியில் இருந்து நீக்கும் பிரேரணைக்கு ஆதரவளிக்கப்போவதாக ஐக்கிய மக்கள் சக்தி கூறியிருந்தபோதும், வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது சுமார் 30 எதிர்க்கட்சி எம்.பிக்கள் பாராளுமன்றத்தில் இருக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.**

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்கும் பிரேரணை நேற்று முன் தினம் காலை 11.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை விவாதிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, மாலை 4.10 மணிக்கு நடைபெற்ற வாக்கெடுப்பில், மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் (வராத உறுப்பினர்கள் உட்பட) 177 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

அதன்படி, தொடர்புடைய பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. பிரேரணைக்கு எதிராக எந்த வாக்கும் இல்லை, எனினும், இராமநாதன் அர்ச்சுனா மாத்திரம் வாக்களிப்பில் இருந்து விலகி இருந்தார்.

இந்நிலையில் முன்னதாக பிரேரணைக்கு ஆதரவளிக்கப் போவதாக இலங்கை தமிழரசுக் கட்சியும் எதிர்க்கட்சியும் கூறியிருந்த நிலையில் 30 எதிர்க் கட்சி எம்.பி.க்கள் வெளியேறியிருந்தமை தொடர்பில் சில விமர்சனங்களும் வெளியாகியுள்ளன.

இலங்கை பொலிஸில் நீண்ட காலமாக இருந்து வந்த தேசபந்து தென்னக்கோன், பதவி நீக்கம் செய்யப்பட்ட நிலையில் அவர் தனது ஓய்வூதியத்தையும் இழந்துள்ளார். (அ)

# விமான எரிபொருள் விற்பனை அதிகரிப்பு

கொழும்பு, ஒக. 08

முதல் 6 மாதங்களில் நாட்டில் விமான எரிபொருள் விற்பனை 21 மில்லியன் லீற்றர்களால் அதிகரித்துள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் 6 மாதங்களுடன் ஒப்பிடும்போது இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அதன் நிர்வாக இயக்குநர் மயூரா நெத்திகுமார தெரிவித்தார்.

பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளுடன் போட்டி விலைகளைப் பராமரிப்பதன் மூலம் எரிபொருள் விற்பனையை அதிகரிக்க முடிந்துள்ளதாக நிர்வாக இயக்குநர் தெரிவித்தார். (அ)

# கபீர் ஹாசிம் எம்.பிக்கு கோபா தலைவர் பதவி!

கொழும்பு, ஒக. 08

பாராளுமன்ற பொதுக் கணக்குகள் குழுவின் (கோபா) தலைவர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் நியமிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பதவியில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் நேற்று முன் தினம் இராஜினாமா செய்தார்.

கோபா குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க அரசாங்கம் ஒப்புக்கொண்டதால், அதற்கான இடத்தை வழங்குவதற்காக இந்த முடிவை எடுத்ததாக அரவிந்த செனரத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி 24 ஆம் திகதி கோபா குழுவின் தலைவராக அரவிந்த செனரத் நியமிக்கப்பட்டதுடன், சுமார் ஏழு மாதங்களாக இந்தப் பதவியில் இருந்து வந்தார். (அ)

# இஸ்ரேலுக்கு எதிராக நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்!




கொழும்பு, ஒக. 08

கொழும்பு நகரின் முக்கிய பகுதிகளில் நேற்று பல்வேறு சமூக அமைப்புகள் மற்றும் மாணவர் கூட்டமைப்புகளின் ஒருங்கிணைப்பில், இஸ்ரேலுடன் உள்ள அனைத்து இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளையும் உடனடியாக துண்டிக்குமாறு கோரி பேரணியும் ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

பலஸ்தீன மக்களுக்கான ஆதரவாகவும், காஸா பகுதியில் நடைபெறும் இஸ்ரேலின் நடவடிக்கைகளை கண்டித்தும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் இஸ்ரேலைப் புறக்கணிக்கவும்!, பலஸ்தீனத்துக்கு சுதந்திரம்!, இஸ்ரேலுடன் உறவுகள் வேண்டாம்! போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தி நடவடிக்கை எடுக்குமாறு அரசை வலியுறுத்தினர்.

ஐக்கிய நாடுகள் தூதரகம், வெளிவிவகார அமைச்சு நோக்கி இப்பேரணி முன்னெடுக்கப்பட்டது.

பங்கேற்பாளர்களில் சமூக செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மதத் தலைவர் மற்றும் பொதுமக்கள் இதில் அடங்கினர். (அ)

# சீனி மாபியாவை விசாரிக்கக் குழு!

கொழும்பு, ஒக. 08

நான்கு உள்ளூர் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் சிவப்பு சீனியை விற்க முடியாமல் திணறி வரும் அரசாங்கம், பதுக்கி வைக்கப்பட்டுள்ள பங்குகளை சந்தைக்கு இரகசியமாக வெளியிடுவதில் ஒரு மாபியா ஈடுபட்டுள்ளதா என்பதை விசாரிக்க ஒரு குழுவை நியமித்துள்ளதாக அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

மொத்த சீனித் தேவையில் 11 சதவீதம் மட்டுமே பெல்வத்த, செவனகல, எதிமல மற்றும் கல்ஓயா ஆகிய இடங்களில் உள்ள தொழிற்சாலைகளில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது.

வர்த்தக பிரதி அமைச்சர் ஆர்.எம்.ஜயவர்தன அளித்த பேட்டியில், 20 சதவீத நுகர்வோர் மட்டுமே நாட்டில் முழுமையாக தயாரிக்கப்பட்ட சிவப்பு சீனியைப் பயன்படுத்துகின்றனர் என்று கூறினார். (அ)

# நுவரெலியாவில் கன மழை

கொழும்பு, ஒக. 08

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வந்த கன மழை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது.

குறிப்பாக லக்சபான, பொல்பிட்டிய, நவ லக்சபான, கலுகல, காசல்ரீ, மவுசாகல, மேல் கொத்மலை ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை எட்டிய வண்ணம் உள்ளது.

மவுஸ்சாகலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட இன்னும் 5 அடி மட்டுமே நிரம்ப வேண்டியுள்ளது.

அதே போல் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட இன்னும் 3 அடி நீர் நிரம்ப வேண்டி உள்ளது. ஏனைய நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை எட்டிய வண்ணம் உள்ளது.

தற்போது இப் பகுதியில் உள்ள அனைத்து ஆறுகள், நீர் வீழ்ச்சிகள், ஓடைகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

இதனால் சகல நீர் மின் நிலையங்களும் நீர் மின் உற்பத்தியை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாமல் ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கு விசாரணை ஜனவரியில்!

கொழும்பு, ஒக. 08

சட்டவிரோதமாக சம்பாதித்த 15 மில்லியன் ரூபா பணத்தை என்.ஆர். கன்சல்டன்சி என்ற நிறுவனத்தில் முதலீடு செய்தமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட நால்வருக்கு எதிராக தாக்கல்செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

இந்த மனு நேற்றைய தினம் காலை கொழும்பு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது இந்த மனுவுடன் தொடர்புடைய நாமல் ராஜபக்ஷவும் ஏனைய பிரதிவாதிகளும் நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

இதன்போது நீதிமன்றில் ஆஜரான குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், இந்த மனு மீதான நீதிமன்ற அறிக்கைகள் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை என தெரிவித்திருந்தனர்.

இதனை கருத்தில்கொண்ட நீதவான் இந்த மனு எதிர்வரும் ஜனவரி மாதம் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உத்தரவிட்டுள்ளார். (அ)

# ராஜிதவின் மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக. 08

தனது முன் பிணை மனுவை நிராகரித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மீள பரிசீலனை செய்து தன்னை பிணையில் விடுதலை செய்யுமாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை ஒத்திவைத்து கொழும்பு மேல்நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தில் மணல் அகழ்வும் திட்டத்தை கொரிய நிறுவனத்துக்கு ஒப்படைத்து அரசாங்கத்துக்கு 2.63 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக நட்டத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனுவெல கடந்த ஜூலை மாதம் 11 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் தன்னை கைது செய்வதை தடுக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன் பிணை மனு தாக்கல் செய்தார்.

ஆனால், கொழும்பு நீத வான் நீதிமன்றம் இந்த முன் பிணை மனுவை கடந்த ஜூலை மாதம் 18 ஆம் திகதி நிராகரித்தது.

தனது முன் பிணை மனுவை நிராகரித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மீள பரிசீலனை செய்து தன்னை பிணையில் விடுதலை செய்யுமாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பு மேல்நீதிமன்றில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் இந்திகா காலிங்கவம்ச முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது நீதிமன்றில் ஆஜரான இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரி ஒருவர், இந்த மனு தொடர்பான அறிக்கைகள் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இதுவரை சமர்ப்பிக்கவில்லை என தெரிவித்தார்

இதனை கருத்தில் கொண்ட கொழும்பு மேல்நீதிமன்ற நீதவான் இந்திகா காலிங்கவம்ச, இந்த மனு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 01 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உத்தரவிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தை புதுப்பிப்பதற்கு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஒக. 08

இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தை தற்போதைய நிலைமைகளுக்கு ஏற்ப புதுப்பிக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் நேற்று முன் தினம் கூடிய தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையின் 14ஆவது அமர்வின் போது இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

தேசிய அனர்த்த முகாமைத்துவ சபையின் 14ஆவது அமர்வு நேற்று முன் தினம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

ஏழு ஆண்டுகளில் இந்த சபை கூடிய முதல் முறையாக இது உள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் படி, கடைசிக் கூட்டம் ஏப்ரல் 5, 2018 அன்று நடந்தது.

2004 ஆம் ஆண்டு பேரழிவை ஏற்படுத்திய சுனாமிக்குப் பிறகு கட்டமைக்கப்பட்ட அவசர தேசியத் தேவையைத் தொடர்ந்து, 2005 ஆம் ஆண்டு 13 ஆம் எண் அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் கீழ் தேசிய அனர்த்த முகாமைத்துவ சபை நிறுவப்பட்டது.

சமீபத்திய அமர்வில், தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டங்களும் தேசிய அவசரகால செயல்பாட்டுத் திட்டமும் சபையால் முன்வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

இலங்கையில் தற்போதைய அனர்த்த அபாயக் குறைப்பு முயற்சிகள், வளர்ந்து வரும் போக்குகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் விவாதங்கள் மையப்படுத்தப்பட்டன.

அனர்த்த தயார்நிலை மற்றும் பதிலளிப்பை மேம்படுத்துவதற்கு மையப்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்புடன் கூடிய ஒருங்கிணைந்த செயற்பாட்டு கட்டமைப்பின் தேவை என்பது ஒரு முக்கிய விடயமாக எழுப்பப்பட்டது.

காலநிலை மாற்றத்தின் அதிகரித்து வரும் தாக்கத்தை உணர்ந்து, தற்போதைய யதார்த்தங்களுடன் ஒத்துப்போகவும், புதிய மற்றும் வளர்ந்து வரும் சவால்களை சிறப்பாக எதிர்கொள்ளவும் தற்போதுள்ள அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தை திருத்த வேண்டியதன் அவசரத் தேவையை சபை வலியுறுத்தியது.

இன்றைய நிலைமைகளுக்கு ஏற்ப சட்டம் நவீனமயமாக்கப்பட வேண்டும் என்று குழு முடிவு செய்தது.

அனர்த்த முகாமைத்துவ மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் தொடர்பான நிதி கட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்யுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

நிறுத்தப்பட்ட திட்டங்களை மீண்டும் தொடங்க நிதி ஒதுக்கவும், அனர்த்த முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டை நிர்வகிக்கும் நிதி விதிகளில் திருத்தங்களை முன்மொழியவும் அவர் உத்தரவிட்டார்.

மேலும், ஒரு பிரத்யேக அனர்த்த முகாமைத்துவ நிதியை நிறுவுவதற்கான முன்மொழிவை சபை அங்கீகரித்தது.

அதிக ஆபத்துள்ள வீட்டுவசதிப் பகுதிகளை அடையாளம் காண்பதை விரைவுபடுத்தவும், தேவையான இடங்களில் அவற்றை இடமாற்றம் செய்வதன் மூலம் குடியிருப்பாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், இழப்பீட்டுத் தொகையை மறுபரிசீலனை செய்யவும் ஜனாதிபதி மேலும் அறிவுறுத்தல்களை வெளியிட்டார்.

பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையை அதிகரிக்கவும் அவர் முன்மொழிந்தார். (அ)

# ஆயிரத்து 408 மருத்துவர்களை நியமிக்கும் சுகாதார அமைச்சு

கொழும்பு, ஒக. 08

ஆரம்ப தர மருத்துவ அதிகாரிகளாக பயிற்சிகளை நிறைவு செய்த 1,408 மருத்துவர்களுக்கு நியமனம் வழங்க சுகாதார அமைச்சு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 29 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பயிற்சியை முடித்த, உரிய தகுதிகளைப் பூர்த்தி செய்த மருத்துவர்கள், அமைச்சின் மனிதவள முகாமைத்துவ மற்றும் தகவல் அமைப்பு ஊடாக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் என்று சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவைகள்) மருத்துவர் எச்.எம். அர்ஜுன திலகரத்ன அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக தங்கள் விண்ணப்பங்களை இணையத்தளம் வழியாக சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# போதைப்பொருளுடன் 3 இந்தியர்கள் கைது!

கொழும்பு, ஒக. 08

12 கிலோ 160 கிராம் குஷ் ரக போதைப்பொருளுடன், இந்தியாவைச் சேர்ந்த இரண்டு பெண்கள் உட்பட்ட மூவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழு மேற்கொண்ட சோதனையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதான சந்தேகநபர்கள் 42,22,43 வயதுடையவர்களாவர். சந்தேகநபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

# கோட்டாவுக்கு போன்றதொரு நிலைமை அநுரவுக்கு வராது!

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி

கொழும்பு, ஒக. 08

**கோட்டா கோ கம போன்று, அநுர கோ கம ஒரு போதும் உருவாகாது எனவும் அது உருவாக்கப்பட்டால், அதை அரசியல்வாதிகள் அல்லாது, மக்களே உருவாக்க வேண்டும் எனவும் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.**



கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை மக்கள் போய்விடுங்கள் என்று சொன்னால், தோழர் அநுர ஒரு கணம் கூட தங்கமாட்டார். நம்மில் யாரும் ஒரு கணம்கூட தங்க மாட்டோம்

நாம் இங்கு மகிழ்ச்சிக்காக இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

பெல்வத்தையில் உள்ள செவனகல கரும்பு விவசாயிகளுக்கு இரண்டு மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை என்று கூறி, அங்கும் ஒரு கிராமத்தை உருவாக்க முயன்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# அமெ. வரி தாக்கம் குறித்து உயர்மட்ட பேச்சுவார்த்தை

கொழும்பு, ஒக. 08

இலங்கை பொருட்கள் மீதான அண்மைய 20 வீத அமெரிக்க வரி குறித்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை நேற்று உயர்மட்ட அரச அதிகாரிகள் மற்றும் ஏற்றுமதி துறை பிரதிநிதிகளுடன் முக்கிய கலந்துரையாடலொன்றை நடத்தியது.

இதன்போது, கட்டணச் சவாலை எதிர்கொள்ள ஏற்றுமதித் துறையின் கூட்டு முயற்சியின் முக்கியத்துவத்தை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க வலியுறுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி உதவி, தொழில்துறை கண்டுபிடிப்பு மற்றும் வர்த்தக கொள்கை மாற்றங்கள் உள்ளிட்ட அரசாங்க ஆதரவு திட்டங்களை நிதி, தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுகளின் சிரேஷ்ட செயலாளர்கள் கோடிட்டுக் காட்டினர்.

புதிய சந்தை வாய்ப்புகள் குறித்தும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டதுடன், இது ஏற்றுமதியாளர்கள் அமெரிக்காவை நம்பியிருப்பதை பல்வகைப்படுத்தவும் குறைக்கவும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

ஏற்றுமதியாளர்கள் திறந்த உரையாடலில் ஈடுபட்டதுடன், கவலைகள் மற்றும் உத்திகளைப் பகிர்ந்து கொண்டனர்.

அத்துடன், நிலையை சரிவர கையாள்வதற்கான குறுகிய மற்றும் நீண்ட கால திட்டங்களை உருவாக்குவதற்காக விசேட பணிக்குழு அமைப்பதற்கும் கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (அ)

# அழகு பொருட்களில் கன உலோகங்கள்!

## நுகர்வோர் அதிகாரசபை எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 08

நாட்டில் விற்கப்படும் 49 வகையான அழகுசாதனப் பொருட்களில் பொருத்தமற்ற அளவு கன உலோகங்கள் உள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறிப்பாக, சரும வெண்மையாக்கல் பொருட்களில் இப்பிரச்சினை அதிகம் என பணிப்பாளர் சமந்தா கருணாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

ஒன்லைன் விற்பனையைத் தடுக்க கண்காணிப்பு, தரசோதனை, சட்ட நடவடிக்கைகள் உள்ளிட்டவை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# வழக்கு கோப்பில் பக்கங்களை கிழித்த சட்டத்தரணி பணிநீக்கம்

கொழும்பு, ஒக. 08

மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு கோப்பிலிருந்து பக்கங்களை சட்டவிரோதமாக கிழித்து எறிந்ததன் மூலம் நெறிமுறைகளை மீறியதாக குற்றம் சாட்டப்பட்ட சட்டத்தரணி டபிள்யூ.டி. தர்மசிறி கருணாரத்னவை உயர் நீதிமன்றம் பணிநீக்கம் செய்ய முடிவு செய்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் சம்பந்தப்பட்ட சட்டத்தரணிக்கு எதிராக தாக்கல் செய்த முறைப்பாட்டை விசாரித்த பின்னர், உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குமுதுனி விக்ரமசிங்க மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோரின் ஒப்புதலுடன் பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன இந்த தீர்ப்பை அறிவித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஆவணக் காப்பகத்திற்கு சென்று, ஒரு வழக்குக் கோப்பைப் பெற்று, அதிலிருந்து இரண்டு பக்கங்களை சட்டவிரோதமாக கிழித்ததாக பிரதிவாதியான சட்டத்தரணி மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பின்னர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதிவாளர் டபிள்யூ.எஸ்.பி.எஸ். பெர்னாண்டோ, இது குறித்து மருதானை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார். மேலும் சம்பந்தப்பட்ட சட்டத்தரணி மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, 2023 ஜனவரி 25ஆம் திகதியன்று தலா 500,000 ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டார் என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, நீதித்துறை பட்டியலில் இருந்து பெயரை நீக்காமல் இருப்பதற்கான சமர்ப்பணங்களை முன்வைக்குமாறு நீதித்துறைச் சட்டத்தின் பிரிவு 42(3) இன் கீழ் குற்றப்பத்திரிகை வெளியிடப்பட்டது. மேலும் அவர் நீதிமன்றத்தில் இந்த குற்றச்சாட்டில் தான் ஒரு நிரபராதி என்று தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஒரு சாட்சி விசாரணை நடைபெற்றது. இதன்போது பிரதிவாதியின் சட்டத்தரணியும் சாட்சியமளித்தார்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் தீர்ப்பை வழங்கிய பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன, நீதித்துறைச் சட்டத்தின் பிரிவு 40 இன் படி, நல்ல நற்பெயர் பெற்ற, திறமையான அறிவு மற்றும் திறன் கொண்ட நபர்கள் மட்டுமே உயர் நீதிமன்றத்தால் சட்டத்தரணிகளாக அனுமதிக்கப்பட்டு பணியமர்த்தப்படுகிறார்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார்.

அத்தகைய சட்டத்தரணிகள் பதிவு செய்யப்பட்டவுடன் எந்தவொரு மோசடி, முறைகேடு, குற்றம் செய்ய முடியாது என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. இது பொதுமக்களின் மற்றும் நாட்டில் நீதி நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் நியாயமான எதிர்பார்ப்பாகும்.

ஒரு சட்டத்தரணிக்கான எதிர்பார்த்த தரத்தை பராமரிக்க முடியாவிட்டால், அத்தகைய சட்டத்தரணி அந்தப் பதவியில் தொடர்ந்து செயற்படுவதை அனுமதிக்க முடியாது என்றும், நல்ல பெயர், அறிவு மற்றும் திறன் கொண்ட நபர்கள் மட்டுமே சட்டத்தரணிகளாக செயற்பட வேண்டும் என்ற பொதுமக்களின் விருப்பத்தை கருத்திற் கொள்வது நீதிமன்றத்தின் கடமை என்றும் பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியந்த ஜெயக்கொடி பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஒக. 08

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜெயக்கொடி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, கண்டி நீதவான் நீதிமன்றத்தால் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலிடமிருந்து தனக்கு கொலை மிரட்டல் வந்ததாக போலியான முறைப்பாட்டை வழங்கியமை தொடர்பில் ராகம பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், பிரியந்த ஜயகொடி குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கடந்த மாதம் 28ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

அதன்படி சம்பந்தப்பட்ட வைத்தியசாலைக்குச் சென்ற மஹர நீதவான், சந்தேக நபரை நேற்று முன் தினம் வரை விளக்கமறியலில் வைக்க உத்தர விட்டார்.

கெஹல்பத்தர பத்மே என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலிடமிருந்து தனக்கு கொலை மிரட்டல் வந்ததாகக் கூறி அவர் இந்த போலி முறைப்பாட்டை அளித்திருந்தார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டபோது இது போலி முறைப்பாடு என்பது தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாடசாலை மாணவரிடையே மன அழுத்தநிலை அதிகரிப்பு

## தினசரி 8 உயிர்மாய்ப்புகள் பதிவு

கொழும்பு, ஒக. 08

**பாடசாலை மாணவர்களிடையே மன அழுத்தம் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

2024ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பாடசாலை சுகாதார கணக்கெடுப்பில், 22.4 வீதமாணவர்கள் தனிமையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 11.9 வீத மாணவர்கள் கவலை காரணமாக தூக்கமின்மையை எதிர்கொள்வதாகவும், 18 வீத மாணவர்களுக்கு மனச்சோர்வு அறிகுறிகள் தென்பட்டதாகவும் சுகாதார அமைச்சின் உளநலப் பணிப்பாளர் காரியாலயத்தின் பதில் பணிப்பாளர் வைத்தியர் லக்மினி மகோதரதன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 75 வீத மாணவர்களுக்கு நெருக்கமானவர்கள் இல்லை எனவும் நாட்டில் தினசரி சுமார் 8 உயிர்மாய்ப்புகள் பதிவாகுவதாகவும் தேசிய மனநல நிறுவனத்தின் வைத்தியர் சஜீவன அமரசிங்க கூறினார்.

1996 இல் உலகளவில் உயிர்மாய்ப்புகளில் இரண்டாம் இடத்தில் இருந்த இலங்கை, தற்போது ஒரு இலட்சத்துக்கு 15 உயிர்மாய்ப்புகளாகக் குறைந்துள்ளது.

ஆண்டுக்கு 3,500 உயிர்மாய்ப்புகள் நிகழ்ந்தாலும், ஊடகங்கள் இவற்றை பெரிதாக வெளியிடுவது குறைந்துள்ளது, இது ஒரு முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. (அ)

# பொலிஸ் நிலைய ஆயுதக் கிடங்கிலிருந்து துப்பாக்கியைத் திருடிய சார்ஜன்ட் கைது!

கொழும்பு, ஒக. 08

கொழும்பு - கொம்பனி வீதி பொலிஸ் நிலையத்தின் ஆயுதக் கிடங்கில் இருந்து துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை திருடிய குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கொம்பனி வீதி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஆவார்.

கொம்பனி வீதி பொலிஸ் நிலையத்தின் ஆயுதக் கிடங்கில் இருந்து துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் காணாமல் போனமை தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, அதே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை திருடிச் செல்லும் காட்சிகள் சிசிரிவி கமெராவில் பதிவாகியுள்ளன.

சந்தேக நபரான பொலிஸ் சார்ஜன்டிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், திருடப்பட்ட துப்பாக்கி மற்றும் 20 தோட்டாக்கள் மாவத்தகம பகுதியில் உள்ள நபர் ஒருவரிடம் வழங்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேக நபரான பொலிஸ் சார்ஜன்ட் கொம்பனி வீதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொம்பனி வீதி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# நேற்று முதல் பாடசாலை விடுமுறை

கொழும்பு, ஒக. 08

இந்த வருடத்திற்கான பாடசாலை இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் நேற்றுடன் நிறைவடைந்தன. மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகளின் முதல் கட்டம் இம்மாதம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மூன்றாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகளின் இரண்டாம் கட்டம் நவம்பர் 17 ஆம் திகதி ஆரம்பமாகி டிசெம்பர் 19 ஆம் திகதி வரை நடைபெறும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

# அரசியல்வாதிகளுக்கு எதிரான வழக்குகள் 2022-2024 காலப்பகுதிகான தரவுகள் இல்லை

## சபையில் கூறினார் ஹர்ஷன நாணயக்கார

கொழும்பு, ஒக். 08



2015 முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகள் மற்றும் படுகொலைகள் தொடர்பில் அரசியல்வாதிகள், அரச அலுவலர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2022-2024 காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை தொடர்பான தரவுகள் இல்லாத காரணத்தால் வினவப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹுமான்,

2015 முதல் 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகள் மற்றும் படுகொலைகள் தொடர்பில் அரசியல்வாதிகள், அரச அலுவலர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2022-2024 காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை என்ன?

அவற்றில் இன்றளவில் நிறைவடைந்துள்ள வழக்கு விசாரணைகளின் எண்ணிக்கை என்ன, அவ்வழக்குகள் யாவை, வழக்குகளில் சட்டத்துறை தலைமையதிபதியினால் மீளப்பெறப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை எத்தனை என்பது தொடர்பில் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, முன்வைக்கப்பட்ட இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது ஏனெனில் 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடிகள் மற்றும் படுகொலைகள் தொடர்பில் அரசியல்வாதிகள், அரச அலுவலர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் 2022-2024 காலப்பகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை தொடர்பில் எவ்வித தரவுகளும் கிடையாது.

சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்படும் போது அரசியல்வாதிகள், அரச அலுவர்கள் என்று வகைப்படுத்தப்படுவதில்லை. அது தவறானது. பொதுவான நிரல்படுத்தலே குற்றங்களை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படுகிறது-என்றார். (அ)

# அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடமே திருச்சபை விளக்கம் கோரவேண்டும்

## கூறுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஒக. 08

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றபோது, அந்த ஆராதனைகளில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை பங்கேற்றிருக்கவில்லை என அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்ததையே தானும் தெரிவித்தாகவும், எனவே கத்தோலிக்க சபை விளக்கம் கோருவதாயின் அவரிடமே கோரவேண்டும் எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் கூறியதையே நானும் கூறினேன்.

அதற்கு அப்பால் எந்தவொரு கருத்தையும் நான் தெரிவிக்கவில்லை.

எனவே நான் கூறியது தவறென்றால் பிமல் ரத்நாயக்க கூறியது தவறாக இருக்கவேண்டும்.

எனவே அவர் கூறிய கருத்துக்கள் உண்மையானவையா பொய்யானவையா என்பதை ஆராய வேண்டும்.

அவர் தெரிவித்த கருத்தை நான் கூறியதில் என்ன தவறு?

அவ்வாறெனில் அவர் கூறிய விடயங்களை பாராளுமன்றத்துக்கு வெளியில் கூறுமாறு பிமல் ரத்நாயக்கவுக்கு கத்தோலிக்க சபை சவால் விடுக்க வேண்டும்.

அவர் தெரிவித்த விடயங்கள் உண்மையானவை எனில் பாராளுமன்றத்துக்கு வெளியில் எவ்வித அச்சமும் இன்றி அவற்றை மீண்டும் கூற முடியுமல்லவா? கத்தோலிக்க சபைக்கும் நேரடியாக அவரிடம் விளக்கத்தைக் கோர முடியும்.

அதனை விடுத்து என்னை சுற்றி வளைப்பதால் எவ்வித பிரயோசனமும் இல்லை.

முதலாவதாக கருத்து கூறிய பிமல் ரத்நாயக்கவை விடுத்து என்னை நெருக்கடிக்குள்ளாக்குவதற்கான காரணம் என்ன? அது நியாயமல்ல. அரசாங்கத்தின் மீதான மக்களின் எதிர்பார்ப்புக்கள் சீர்குலைந்துள்ளன.

பொருளாதார சுமை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கிறது.

விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து துறை சார்ந்தவர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அது மாத்திரமின்றி இளைஞர்களும் கைவிடப்பட்டுள்ளனர்.

அரச துறைகளின் பெரும்பாலானவை ஜே.வி.பி மயப்படுத்தப்பட்டுள்ளன.

தனி கட்சியின் ஆட்சியொன்றை பலவந்தமாகவேனும் முன்னெடுக்க வேண்டும் என்பதே ஜே.வி.பி.யின் கனவாகும்.

கம்யூனிஸ்ட் கட்சி தலைமையகத்துக்குச் சென்று றில்வின் சில்வா இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் சகல அரசியல் சக்திகளும் இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

இதற்கு எதிராக அனைத்து கட்சிகளும் இணைந்து குரல் கொடுக்க வேண்டும்-என்றார். (அ)

# சட்டவிரோதமாக பொருத்தப்பட்ட ஜீப் வாகனம் ஒன்று கண்டுபிடிப்பு

கொழும்பு, ஒக. 08

கணேமுல்ல பகுதியில் சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்ட சுமார் 30 மில்லியன் ரூபா மதிப்புள்ள சொகுசு ஜீப் வாகனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையின் போது இந்த ஜீப் வாகனம் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வாகனம் அப்பகுதியில் நன்கு அறியப்பட்ட வாகனம் பழுது பார்க்கும் நிலையமொன்றின் உரிமையாளரிடம் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மீட்கப்பட்ட ஜீப் வாகனம் மேலதிக விசாரணைக்காக கணேமுல்ல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூரில் மனித எலும்பு எச்சங்கள் மீட்பு அகழ்வுப் பணிக்கு நீதிமன்றம் உத்தரவு

திருகோணமலை, ஓக. 08

**சம்பூரில் மனித எலும்பு எச்சங்கள் காணப்பட்ட காணியில் மேலும் மனித எலும்புக்கூடுகள், மற்றும் எச்சங்கள் உள்ளனவா? என்பதை கண்டறிய கிழக்கு பிராந்திய இராணுவ கட்டளைத்தளபதியின் ஆலோசனையைப் பெற்று இராணுவப் பாதுகாப்பு ஆளணியின் உதவியுடன் முறைப்படி அகழ்வு நடத்தப்பட வேண்டும் என்று மூதூர் நீதிவான் தஸ்னீம் பௌஸான் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.**

மேலும், இது தொடர்பான வழக்கு விசாரணையை எதிர்வரும் 26ஆம் திகதி எடுத்துக்கொள்வதாகவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அத்துடன், இதுவரை அங்கு கண்டெடுக்கப்பட்ட மூன்று எலும்புக்கூடுகளில் ஒன்று, 25 வயதுக்கு குறைந்த ஆண் ஒருவருடையது. மற்றையது 25 - 40 வயதுக்குட்பட்ட ஒருவருடையது. அடுத்தது 40 - 60 வயதுக்குட்பட்ட ஒருவருடையது என்றும் நேற்று முன்தினம் வழக்கு மாநாட்டின்போது மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி அறிக்கை முன்வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பேசிய சட்ட வைத்திய அதிகாரி, இந்த இடம் மயானம் என்பதற்கு இதுவரை ஆதாரங்கள் முன்வைக்கப்படவில்லை. மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட எலும்பு எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த எச்சங்களுக்குரியவர்கள் இயற்கையாக மரணம் அடைந்தார்களா? அல்லது ஏதேனும் குற்றச் செயல்கள் மூலம் மரணம் நிகழ்ந்ததா? என்பதை கண்டறிய மேலும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும் என்று கூறினார்.

இந்தக் காணி அரச காணியாக உள்ளபோதும் இங்கு ஒரு மயானம் இருந்ததற்குரிய ஆதாரங்கள் ஏதும் இல்லை என்று இந்த வழக்கு மாநாட்டில் தொல்பொருள் திணைக்களம், பிரதேச செயலக செயலாளர் மற்றும் பிரதேச சபை செயலாளர் ஆகியோரால் அறிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இந்த அறிக்கைகளை ஆராய்ந்த பின்னரே நீதிமன்று அகழ்வு நடத்தப்பட வேண்டும் என்ற உத்தரவை பிறப்பித்துள்ளது.

வழக்கு மாநாட்டில் மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி, தொல்பொருள் திணைக்கள அதிகாரி, புவிச்சரிதவியல் துறை அதிகாரி, பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினர், தேசிய கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினர், மாக் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தினர், பிரதேச செயலாளர், பிரதேச சபைச் செயலாளர், காணாமல் ஆக்கப்பட்டோர் தேசிய செயலகத்தின் சட்டத்தரணி, பிரதேச காணி உத்தியோகத்தர், பிரிவுக்கான கிராம உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கடந்த ஜூலை 19ஆம் திகதி மிதிவெடி அகற்றும் பணிகள் அப்பகுதியில் செயல்ப்படுத்தப்பட்டபோது, மனித மண்டையோடு, கால் எலும்பு என்பன கண்டுபிடிக்கப்பட்டன. இதனையடுத்து, கடந்த 23ஆம் திகதி சம்பவ இடத்தை மூதூர் நீதிவான் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதனையடுத்து, கடந்த 30ஆம் திகதி இவ்விடயம் தொடர்பில் மூதூர் நீதிமன்றில் விசாரணைகள் நடைபெற்றன. அன்றைய தினம் நீதிபதி விடுத்த அறிவிப்பின்படி, நேற்று முன்தினம் புதன்கிழமை நீதிமன்ற கூட்டம் நீதிபதி தலைமையில் நடைபெறும் எனவும், இந்தக் கூட்டத்தின் பின்னர் இந்த மனித எச்சங்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. (எ)

# எல்லை நிர்ணய ஆணைக்குழு நிர்வாக சிக்கலுக்கு தீர்வல்ல

## தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் வலியுறுத்தல்

கொழும்பு, ஓக. 08

மட்டக்களப்பு, கோறளைப்பற்று நிர்வாக பிரிவில் காணப்படும் சிக்கலுக்கு எல்லை நிர்ணய ஆணைக்குழுவை அமைத்து தீர்வு பெற முடியாது. மீண்டும் எல்லை நிர்ணய குழு அமைப்பது வேதாளம் முருங்கை மரம் ஏறும் செயல்பாடாக அமையும். இந்தப் பிரச்னைக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து பேசி தீர்வு காண வேண்டும். எனவே, தீர்வு காண்பதற்கு விரிவான பேச்சுக்களில் ஈடுபடத் தயார் என தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் கூட்டாக தெரிவித்தனர்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வில் சபை ஒத்திவைப்பு வேளையின்போது கோறளைப்பற்று நிர்வாக சிக்கல் தொடர்பில் பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எம். ஹிஸ்புல்லா, 1999ஆம் ஆண்டு இலங்கையில் புதிய பிரதேச செயலகங்களை உருவாக்குவதற்காக பொதுநிர்வாக அமைச்சினால் நியமிக்கப்பட்ட "பாணம்பரன" ஆணைக்குழு அறிக்கையின் பிரகாரம் இந்த நாட்டில் 8 புதிய பிரதேச செயலகங்களை உருவாக்குவதற்கு சிபாரிசு செய்யப்பட்டது.

2012-2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை மீளாய்வு செய்ய அறிக்கை சமர்ப்பிக்க எல்லை நிர்ணய குழு ஒன்றை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. இது பாராட்டத்தக்கது. வெகு விரைவில் தீர்வு காண வேண்டும்- என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் இந்த பிரச்னையை ஒரு சமூக பிரச்னையாக உருவாக்கியமையின் பின்புலம் தேசிய மக்கள் சக்தியின் ஓட்டமாவடி பிரதேச சபையின் உறுப்பினர்களை சாரும். அந்த மூவரும் தான் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக குறிப்பிட்டார்கள். இரண்டு சமூகங்களும் ஒற்றுமையாக கிழக்கு மாகாணங்களில் வாழ வேண்டும் என்பதற்காக பல பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். இரண்டு இனங்களுக்கும் இடையில் முரண்பாடான சூழல் மீண்டும் தோற்றம் பெற இடமளிக்க முடியாது. -என்றார். (எ)

# "திராய்க்கேணியிலும் மனிதப்புதைகுழி உடனடியாக தோண்டப்பட வேண்டும்"

காரைதீவு, ஓக. 08

"செம்மணி போன்று திராய்க்கேணியிலும் மனிதப்புதைகுழி உள்ளது. இதுவும் தோண்டப்பட வேண்டும்"- என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி திராய்க்கேணி படுகொலை சம்பவத்தின் 35 ஆவது வருட நினைவேந்தல் திராய்க்கேணி எழுச்சி ஒன்றியம் ஏற்பாட்டில் சம்பவம் இடம்பெற்ற திராய்க்கேணி சிறீ முத்துமாரியம்மன் கோவில் முன்றலில் புதன்கிழமை மாலை நடைபெற்றது.

இதன்போதே மேற்கண்டவாறு கூறப்பட்டது. அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"செம்மணி போன்று திராய்க்கேணியிலும் மனிதப்புதைகுழி உள்ளது. இதுவும் தோண்டப்பட வேண்டும். கிழக்கு மாகாணத்தில் 1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆறாம் திகதி நன்கு திட்டமிடப்பட்ட வகையில் அரங்கேற்றப்பட்ட இனப்படுகொலை இன்றும் மக்களிடையே இருப்பை கேள்விக்கு உள்ளாக்கி வருகிறது. அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்திருக்கின்ற ஒரே ஒரு தமிழ் கிராமம் திராய்கேணியாகும். இது தமிழர் பண்பாடு மிகுந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கிராமமாகும். சைவ ஆலயங்கள் இந்த கிராமத்தின் தன்மைக்கு ஆதாரமாய் இருக்கும் சான்றுகளாகும். இந்த கிராமத்தை ஆக்கிரமிக்க வேண்டும் என்றும் அதேபோன்று அம்பாறையில் பல பகுதிகளையும் ஆக்கிரமித்து விட வேண்டும் என்றும் எண்ணம் கொண்டிருந்த பேரினவாத ஆக்கிரமிப்பின் வெளிப்பாடாகவே திராய்க்கேணி மீதான இனப்படுகொலை அரங்கேற்றப்பட்டது". என்றனர். (எ)

# அக்கரைப்பற்றில் சுனாமி வீடுகளை பகிர்ந்தளிக்க அரசாங்கம் நடவடிக்கை

## பிரதமர் ஹரிணி சபையில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 08

பல வருடங்களாக இழுபறி நிலையில் காணப்படும் சவூதி அரசாங்கத்தின் நிதியில் அக்கரைப்பற்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுனாமி வீடுகளை பகிர்ந்தளிப்பது தொடர்பில் பாராளுமன்ற குழு ஒன்றை நியமித்து உரிய நடவடிக்கை எடுக்க முடியும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை காதர் மஸ்தான் எம்.பி. பிரதமரிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2004 ஆம் ஆண்டு டிசெமபர் 26 ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது வீடுகளை இழந்த அம்பாறை மாவட்ட மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக சவூதி அரேபிய அரசாங்கத்தின் மனிதாபிமான உதவியில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 500 வீடுகளுடன் வீட்டுத் திட்டம் நிர்மாணிக்கப்பட்டது.

அம்பாறை தீகவாபி ரஜ மஹா விகாரைக்கு அருகாமையில் இந்த வீட்டுத் திட்டம் அமைந்துள்ளதால் எல்லாவல மேதானந்த தேரர் உள்ளிட்ட தரப்பினர் அது தொடர்பில் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளனர்.

அப்பகுதியில் முஸ்லிம் மக்களை குடியேற்றுவதானது பௌத்த மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயலாகும் என தெரிவித்து 2008, மார்ச், 31ஆம் திகதி மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட 12 பேருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மேற்படி அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் பயனாளிகளுக்கு வீடுகளை பகிர்ந்தளிப்பதை நிறுத்த நேர்ந்தது.

அந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட உயர் நீதிமன்றம், 2009 ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி தீர்ப்பு வழங்கியது. அதில் அரசாங்கத்தின் காணி மக்களுக்கு வழங்கும்போது அது சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மாத்திரமே வழங்க முடியும் என்றும் சட்டத்துக்கு அப்பால் எதையும் செய்ய முடியாது என்றும் தீர்மானித்தது.

அந்த வகையில் அரசாங்கத்தினால் தேசிய இன விகிதாசார அடிப்படையில் இந்த பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற தீர்ப்பினால் இதுவரை காலமும் அந்த 500 வீடுகள் பகிர்ந்தளிக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன. அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் அது தொடர்பில் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன்படி அம்பாறை மாவட்டத்தில் வசிக்கும் மக்களின் இன விகிதாசாரப்படி இந்த வீடுகள் பகிர்ந்தளிக்கப்படுவது பொருத்தமானது என அங்கு தீர்மானிக்கப்பட்டது.

நீதிமன்ற தீர்ப்பை அவமதிக்காத வகையில் அந்த வீடுகளை பகிர்ந்தளிப்பதற்கு ஒரு முறைமையை பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்றத்தில் குழு ஒன்றை அமைப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்க முடியும். இதேவேளை சவூதி அரசாங்கமானது மேற்படி வீடுகளின் நிலைமை தொடர்பில் அமைச்சரவையுடன் அடிக்கடி வினவி வருகிறது"- என்றார். (எ)

# திருகோணமலையில் கவனவீர்ப்பு போராட்டம்

திருகோணமலை, ஓக. 08

மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் இல்மனைட் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக மக்கள் எழுச்சி "கருநிலம்" போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் விதமாக திருகோணமலையில் நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

திருகோணமலை பிரதான கடற்கரை முன்றலில் நடைபெற்ற இந்த கவனவீர்ப்பு போராட்டத்தை தளம் சூழலியல் அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது நிலமிழந்தால் எங்கள் பலம் இழப்போம், நீங்கள் அகழ்வது மணல் மட்டுமல்ல எங்களது வாழ்க்கை உள்ளிட்ட பல வாசகங்களை ஏந்தியவாறும் பலர் இணைந்து கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர். (எ)

# சாய்ந்தமருதில் இனிமேல் இரவு நேர பொலிஸ் ரோந்து

கல்முனை, ஓக. 08

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பிரதேசத்தில் குறிப்பாக கடற்கரை மற்றும் பிரதான வீதிகளில் இரவு நேர பொலிஸ் ரோந்து பணி மேற்கொள்ளப்படும் என்று சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் தெரிவித்தார்.

மாளிகைக்காடு வர்த்தக நலன்புரிச் சங்கத்தின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் இரவு கல்முனை மையோன் பிளாஷா விடுதியில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.

எமது பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக உரிய பாதுகாப்பை பூரணமாக வழங்க முடியாத சூழ்நிலை காணப்படுகிறது . எனினும், முடியுமானளவு பாதுகாப்பை வழங்குகின்றோம்.

இனிவரும் காலங்களில் பிரதான வீதிகளிலும் கடற்கரை வீதியிலும் இரவு நேரங்களில் பொலிஸ் ரோந்து போடுவதாகவும் கூறினார். (எ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு மேலும் 25 சதவீதம் வரி விதிப்பு

## ட்ரம்ப் அதிரடி அறிவிப்பு

வாஷிங்டன், ஓக. 08

**இந்தியாவுக்கு மேலும் 25 சதவீதம் வரி விதிக்கப்படுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இதனால், இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதியாகும் பொருட்களுக்கான வரி 50 சதவீதமாக அதிகரித்துள்ளது.**



உக்ரைன் மீது தாக்குதல் நடத்தும் ரஷ்யாவிடம் இந்தியா தொடர்ந்து கச்சா எண்ணெய் வாங்கிவந்தது.

இதனால், இந்தியப் பொருட்களுக்கு 25 சதவீதம் வரியும் ரஷ்யாவுடன் கூடுதலாக வர்த்தகம் மேற்கொள்வதால் கூடுதலாக அபராதம் விதிப்பதாகவும் ட்ரம்ப் அண்மையில் அறிவித்தார். முதலில் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் அமுலாகும் என அறிவிக்கப்பட்ட இந்த அறிவிப்பு பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்தாததால் அடுத்த 24 மணி நேரத்தில் இந்த வரியை மேலும் கடுமையாக்க போவதாகவும் ட்ரம்ப் கூறியிருந்தார். இதன் மூலம் அடுத்த 24 மணி நேரத்தில் முடிவை மாற்றிக் கொள்ளும்படி நெருக்கடி கொடுத்திருந்தார்.

அதற்கு இந்தியா இணங்கவில்லை. இதனையடுத்து, இந்தியாவுக்கு கூடுதலாக 25 சதவீதம் வரி விதிப்பதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார். ஏற்கனவே 25 சதவீதம் வரி விதிக்கப்பட்ட நிலையில், தற்போது விதிக்கப்பட்ட வரி மூலம் இந்தியப் பொருட்களுக்கான வரி 50 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (எ)

# இந்தியா மட்டும் ஏன் முன்னேறவில்லை?

## பிரதமர் மோடி கேள்வி

புதுடில்லி, ஓக. 08



இந்தியாவுடன் சுதந்திரம் பெற்ற நாடுகள் எல்லாம் வளர்ச்சியடைந்தபோது, இந்தியா மட்டும் முன்னேறாமல் இருந்தது ஏன் என்பது பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டிய நேரம் இது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

புதுடில்லியில் கடமை பாதை அருகே புதிதாக கட்டப்பட்ட மத்திய தலைமை செயலக கட்டடம் கர்தவ்யா பவனை பிரதமர் மோடி நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மோடி மேலும் கூறுகையில்,

"மேக் இன் இந்தியா மற்றும் தற்சார்பு இந்தியாவின் வெற்றி கதையை எழுத நாம் இணைந்து பணியாற்ற வேண்டும். நாட்டின் உற்பத்தியை அதிகரிப்பதே நமது தீர்மானமாக இருக்க வேண்டும். நாட்டின் கனவுகளை நிறைவேற்றும் தீர்மானத்தை கர்தவ்யா பவன் வெளிப்படுத்துகிறது.

இது வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கு வழிகாட்டும். இந்தியாவுடன் சுதந்திரம் பெற்ற நாடுகள் எல்லாம் வளர்ச்சியடைந்தபோது, இந்தியா மட்டும் முன்னேறாமல் இருந்தது ஏன் என்பது பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டிய நேரம் இது. தற்போதைய பிரச்சினைகளை நாம் எதிர்கால தலைமுறையினருக்கு விட்டு செல்லக் கூடாது என்பதுதான் நமது பொறுப்பாக இருக்க வேண்டும்"- என்றார்.

# ட்ரம்பின் சிறப்பு தூதுவர் புடினுடன் திடீர் சந்திப்பு



மொஸ்கோ, ஓக. 08

ரஷ்யா - உக்ரைன் இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா விதித்த காலக்கெடு இன்றுடன் (ஓகஸ்ட் 8ஆம் திகதியுடன்) முடிவடையவுள்ளது. இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் சிறப்புத் தூதுவர் ஸ்டீவ் விட்காப், ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் நேற்று முன்தினம் ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்தித்து பேச்சு நடத்தினார்.

உக்ரைனில் ரஷ்யாவின் தாக்குதலை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்பதில் ட்ரம்ப் மிகத் தீவிரமாகவுள்ளார். இதற்காக உக்ரைனுடன் ஓர் அமைதி ஒப்பந்தத்தை மேற்கொண்டு போரை நிறுத்த வேண்டி ரஷ்யாவுக்கு 50 நாட்கள் வரை காலக்கெடு விதிப்பதாக ட்ரம்ப் அறிவித்தார். இல்லையெனில் கடுமையான பொருளாதார அபராதங்களை ரஷ்யா எதிர்கொள்ள நேரிடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

ட்ரம்ப் விதித்த காலக்கெடு இன்றுடன் முடிவடைய உள்ள நிலையில் அவரது சிறப்புத் தூதுவர் ஸ்டீவ் விட்காப், அவசர அவசரமாக ரஷ்யாவுக்கு சென்று விளாடிமிர் புடினை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளதாக ரஷ்ய ஜனாதிபதி கிரெம்ளின் மாளிகை தெரிவித்துள்ளது.

எனினும், இந்தச் சந்திப்பில் என்னென்ன முக்கிய அம்சங்கள் இடம்பெற்றன என்பது குறித்த விவரங்களை ரஷ்ய ஜனாதிபதி மாளிகை உடனடியாக வெளியிடவில்லை. கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரியில் அண்டை நாடான உக்ரைன் மீது தாக்குதல் தொடங்கியதிலிருந்து ஏராளமான சர்வதேச தடைகளை சந்தித்துள்ளோம். அவற்றை வெற்றிகரமாக சமாளித்துள்ளோம். சர்வதேச தடைகள் அனைத்தும் குறைந்த அளவிலான தாக்கத்தை மட்டுமே ஏற்படுத்த முடிந்ததாக ரஷ்யா தெரிவித்துள்ளது. (எ)

# இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் ஹிஸ்புல்லா தளபதி படுகொலை

டெல் அவிவ், ஓக. 08

இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் தளபதி ஹொசம் காசிம் கோரப் படுகொலை செய்யப்பட்டார்.

இஸ்ரேல் மீது கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பு கொடூரத் தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக காஸாவுக்கு எதிராக இஸ்ரேல் போரில் இறங்கியது.

20 மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் காஸா பகுதியில் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர். ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இதனை காஸா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

பலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா அமைப்பும் போரில் ஈடுபட்டு வருகிறது. லெபனான் நாட்டில் இருந்தபடி இஸ்ரேலை தாக்கியது. இஸ்ரேலும் பதிலடி தாக்குதலில் ஈடுபட்டது. இதில், அடுத்தடுத்து பலர் கொலை செய்யப்பட்டனர். ஹமாஸ் அமைப்பின் தலைவரான இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டார். அடுத்து, ஹிஸ்புல்லா அமைப்பின் தளபதி புவாத் ஷூகர் என்பவரை இஸ்ரேல் தாக்கி படுகொலை செய்தது.

ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவரான ஹசன் நஸ்ரல்லாவை பெய்ரூட் நகரில் வைத்து இஸ்ரேல் இராணுவம் கடந்த ஆண்டு செப்ரெம்பரில் தாக்குதல் நடத்தி கொன்றது.

இதேபோன்று, ஹிஸ்புல்லா அமைப்பின் தடுப்பு காவல் பிரிவின் தளபதி மற்றும் அவர்களுடைய செயல்குழுவின் உறுப்பினரான நபில் குவாவக் என்பவரையும் இஸ்ரேல் இராணுவம் தாக்கி அழித்தது. தொடர்ந்து லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தியது.

போர் நிறுத்த ஒப்பந்தம் அடிப்படையில் லெபனான் மற்றும் இஸ்ரேல் நாடுகள் மோதலை நிறுத்திக் கொண்டன. லெபனான் மீது நடத்திய தாக்குதலையும் இஸ்ரேல் நிறுத்திக் கொண்டது.

இந்த நிலையில், சிரியாவில் உள்ள பயங்கரவாத அமைப்புகளை லெபனான் நாட்டுப் பகுதியிலிருந்து இயக்கும் பணியில் ஹிஸ்புல்லா அமைப்பினர் ஈடுபட்டு வந்தனர். அவர்களில் ஒருவர் ஹொசம் காசிம் கோரப். இவர் கோலன் ஹைட்ஸ் பகுதியில் ரொக்கெட் தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்டு வந்தார்.

இந்த நிலையில் இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் லெபனானின் பெகா பள்ளத்தாக்கு பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு தாக்குதலில் ஈடுபட்டனர். இந்தத் தாக்குதலில் காசிம் கோரப் உயிரிழந்தார். இவர் ஹிஸ்புல்லா அமைப்பின் தளபதியாகவும் செயல்பட்டு வந்தார். அவருடைய உயிரிழப்பை இஸ்ரேல் இராணுவம் நேற்றுக் காலை வெளியிட்ட அறிவிப்பில் உறுதி செய்துள்ளது. (எ)

# கானாவில் ஹெலிகொப்டர் விபத்து; 2 அமைச்சர்கள் உட்பட 8 பேர் பலி!

அக்ரா, ஓக. 08

ஆபிரிக்க நாடான கானாவில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் இரண்டு அமைச்சர்கள் உட்பட எட்டுப் பேர் பலியாகினர்.

உயிரிழந்தவர்கள் பாதுகாப்பு அமைச்சர் எட்வர்ட் ஓமனே போமா மற்றும் சுற்றுச்சூழல், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் இப்ராஹிம் முர்தலா முஹம்மது என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் சட்டவிரோத சுரங்கத் தொழிலை ஒடுக்குவதற்காக ஒபுவாசி நகரத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது குறித்த விபத்து நிகழ்ந்ததாக தெரிவிக்கப்படுக்கின்றது. (எ)

### "நியாயமற்ற நடவடிக்கை"

# அமெரிக்காவின் 50 சதவீத வரி விதிப்புக்கு இந்தியா கண்டனம்

புதுடில்லி, ஓக. 08

இந்தியப் பொருட்களுக்கு கூடுதலாக 25 சதவீதம் வரி விதித்து உத்தரவு பிறப்பித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், "சமீப நாட்களாக ரஷ்யாவிலிருந்து இந்தியாவின் எண்ணெய் இறக்குமதியை அமெரிக்கா குறிவைத்துள்ளது. இந்தியாவின் இறக்குமதிகள், சந்தை காரணிகளை அடிப்படையாக கொண்டு 140 கோடி இந்திய மக்களின் ஆற்றல் பாதுகாப்பை உறுதி செய்யும் ஒட்டுமொத்த நோக்கத்துடன் செய்யப்படுகின்றன என்பது உட்பட இந்த விடயங்களில் எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளோம்.

எனவே, பல நாடுகளைப் போலவே தன் சொந்த தேசிய நலனுக்காக இந்தியா எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா கூடுதல் வரிகளை விதிக்க முடிவு செய்திருப்பது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இந்த நடவடிக்கைகள் நியாயமற்றவை என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம். இந்தியா தனது தேசிய நலன்களைப் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அசத்தல் வெற்றி




டப்ளின், ஒக. 08

பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து மகளிர் அணி வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. முதல் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 142 ஓட்டங்கள் எடுத்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியால் 131 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால், 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அணி வெற்றி பெற்றது. (எ)



# இலங்கை அணிக்கு 2 வெள்ளி பதக்கம்!

ரோக்கியோ, ஒக. 08

இத்தோசுரியு கராத்தே சங்கத்தின் சர்வதேச கராத்தே சுற்றுப்போட்டி ஜப்பான் தலைநகரம் ரோக்கியோவில் நடைபெற்றது.

இதில், இலங்கை வீரர்கள் 2 வெள்ளிப்பதக்கங்கள் 15 வெண்கலப்பதக்கங்களை சுவீகரித்தனர். (எ)

# பும்ராவின் தரத்தை யாரும் குறைத்து மதிப்பிட கூடாது

## சச்சின் டெண்டுல்கர் கருத்து

மும்பை, ஒக. 08

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ராவின் தரத்தை யாரும் குறைத்து மதிப்பிட வேண்டாம் என்று இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணி, இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்தத் தொடர் 2-2 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. இந்தத் தொடரின் போது ஜஸ்பிரீத் பும்ரா விளையாடாத 2 டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்றது என்ற ரீதியில் செய்திகள் வெளிவந்தன.

இது தொடர்பில் சச்சின் டெண்டுல்கர் கூறுகையில், "ஜஸ்பிரீத் பும்ரா விளையாடாத 2 போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்றது தற்செயலான நிகழ்வுதான். இதை பெரிதாக எண்ணக்கூடாது.

அதையும் இதையும் முடிச்சுப் போட்டு பார்ப்பது சரியல்ல. ஜஸ்பிரீத் பும்ராவின் திறமையை நான் நன்றாக அறிவேன். அவரது தரத்தை யாரும் குறைத்து மதிப்பிட வேண்டாம்.

பும்ராவின் தரம் விதிவிலக்கானது. கிரிக்கெட்டில் அவர் செய்த சாதனைகள் நம்ப முடியாதவை. எந்தச் சந்தேகமும் இல்லாமல் அவர் திறமையான வீரர் என்று சொல்வேன். சிறப்பாக பந்துவீசி இந்திய அணியில் ஒரு நிலையான வீரராக அவர் வலம் வருகிறார். 3 வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் தன்னை சிறந்த வீரர் என்று நிரூபித்து வருகிறார். மற்ற எல்லோருடனும் ஒப்பிடும் போது அவரை நான் முதலிடத்தில் வைப்பேன்.




இங்கிலாந்தில் அவர் விளையாடிய 3 டெஸ்ட் போட்டிகளில் 2 முறை 5 விக்கெட்களைக் கைப்பற்றினார். இதன்மூலம் அவரது செயல்பாட்டை நாம் புரிந்துகொள்ள முடியும். அவர் பங்கேற்ற போட்டிகளில் எல்லாம் சிறப்பாக பந்துவீசி விக்கெட்களைக் கைப்பற்றியிருக்கிறார். அதை யாரும் மறக்கக்கூடாது.

அதேபோல் வாஷிங்டன் சுந்தர் இந்தத் தொடரில் சிறப்பாக பந்துவீசி விக்கெட்களைக் கைப்பற்றி தெரிவாளர்களின் நம்பிக்கையைக் காப்பாற்றியுள்ளார். அவர் களத்தில் விளையாடும் போதெல்லாம் அணிக்கு தேவையானதை செய்தார். 4ஆவது டெஸ்ட் போட்டியின் 2ஆவது இன்னிங்ஸில் பென் ஸ்டோக்ஸ் விக்கெட்டை வாஷிங்டன் சுந்தர் கைப்பற்றியது திருப்புமுனையாக அமைந்தது.

கடைசி டெஸ்ட் போட்டியின் 2ஆவது இன்னிங்ஸில் அற்புதமாக விளையாடி 53 ஓட்டங்களைக் குவித்தார். அதேபோல் 4ஆவது டெஸ்ட் போட்டியில் ரவீந்திர ஜடேஜாவுடன் இணைந்து சதம் விளாசினார். களத்தில் அவருடைய செயல்பாடு எனக்குப் பிடித்திருந்தது.

4ஆவது டெஸ்ட் போட்டியின்போது ரவீந்திர ஜடேஜா, வாஷிங்டன் சுந்தர் ஜோடி மிகச்சிறப்பாக விளையாடி அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றது. அவர்கள் போட்டியை சமநிலையில் முடிப்பதற்காக சிறப்பாக விளையாடினர். அந்தப் போட்டியின்போது இந்திய அணி நிர்வாகமும் வீரர்களும் எடுத்த முடிவு சரிதான். போட்டியை முன்னதாகவே முடித்துக் கொள்ள இந்திய அணி ஒப்புக்கொள்ளாதது சரியான முடிவுதான்" என்று சச்சின் கூறினார். (எ)

# மும்முனை ரி-20 தொடர் நேற்று ஆரம்பமானது

சிம்பாவேக்கு எதிராக இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள சர்வதேச ரி - 20 கிரிக்கெட் தொடர், அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஆசிய கிண்ண கிரிக்கெட் (ரி - 20) தொடர் ஆகியவற்றுக்கு சிறந்த வீரர்களைத் தெரிவு செய்யும் முகமாக சிறிலங்கா கிரிக்கெட் ஏற்பாடு செய்துள்ள உள்ளூர் ரி - 20 மும்முனை கிரிக்கெட் தொடர் கொழும்பு எஸ். எஸ். சி. மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது.

இந்த மாதம் நடைபெறவிருந்த லங்கா பிரீமியர் லீக் டிசெம்பர் மாதம் வரை பிற்போடப்பட்டதால் இலங்கையின் பிரதான கிரிக்கெட் அட்டவணையில் ஏற்பட்ட இடைவெளியைப் பயன்படுத்தி ரி - 20 உள்ளூர் மும்முனைப் போட்டியை சிறிலங்கா கிரிக்கெட் நடத்த தீர்மானித்தது.

இதற்கமைய நிறங்களின் பெயர்களில் 3 வீரர்களின் தலைமையில் 3 அணிகளை சிறிலங்கா கிரிக்கெட் தெரிவு செய்துள்ளது.

சரித் அசலங்க, குமிந்து மெண்டிஸ், துனித் வெல்லாலகே ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்ட இந்த மூன்று அணிகளில் இடம்பெறும் தேசிய வீரர்கள், வளர்ந்துவரும் இலங்கை ஏ அணி வீரர்கள் ஆகியோரின் திறமைகள் உள்ளூர் ரி -20 மும்முனை தொடரில் பரீட்சிக்கப்படவுள்ளது.

நீலம், பச்சை, சாம்பல் ஆகிய 3 நிறங்களின் பெயர்களைக் கொண்ட இந்த அணிகள் ஒன்றையொன்று 4 தடவைகள் லீக் சுற்றில் எதிர்த்தாடும்.

லீக் சுற்று ஒகஸ்ட் 7, 8, 9, 10, 11, 12ஆம் திகதிகளில் நடைபெறும்.

லீக் சுற்று முடிவில் அணிகள் நிலையில் முதலிரண்டு இடங்களைப் பெறும் அணிகள் அக்டோபர் 16ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதிபெறும்.

போட்டிகள் யாவும் எஸ். எஸ். சி. மைதானத்தில் பிற்பகல் 01.30 மணிக்கு ஆரம்பமாகும். (எ)




# ஜூலை மாத சிறந்த வீரர் விருது கில், ஸ்டோக்ஸ் பெயர் பரிந்துரை

மும்பை, ஒக. 08

ஜூலை மாதத்துக்கான ஐ.சி.சி. சிறந்த வீரர் விருதுக்கு இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் சுப்மன் கில் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மாதம் தோறும் சிறந்த கிரிக்கெட் வீரரை தெரிவு செய்து ஐ.சி.சி. கௌரவித்து வருகிறது. அந்த வகையில் ஜூலை மாதத்துக்கான சிறந்த வீரரை தெரிவு செய்ய 3 வீரர்களின் பெயர்களை ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

இந்த விருதுக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் இந்தியாவின் சுப்மன் கில், இங்கிலாந்து அணியின் தலைவர் பென் ஸ்டோக்ஸ், தென்னாபிரிக்க வீரர் வியான் முல்டர் ஆகியோரது பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

இங்கிலாந்து - இந்தியா இடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் சுப்மன் கில் சிறப்பாக விளையாடி 754 ஓட்டங்கள் குவித்ததை தொடர்ந்து பரிந்துரைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# ஐ. சி. சி. டெஸ்ட் தரவரிசையில் 12 இடங்கள் முன்னேறிய சிராஜ்

டுபாய், ஒக. 08

ஐ.சி.சி. ஆடவர் டெஸ்ட் கிரிக்கெட் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் 12 இடங்கள் முன்னேறி தற்போது 15ஆவது இடத்தை பிடித்துள்ளார் இந்திய வீரர் முகமது சிராஜ்.

அண்மையில் ஓவல் மைதானத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் மொத்தம் 9 விக்கெட்களை கைப்பற்றியிருந்தார் சிராஜ். இந்த டெஸ்ட் போட்டியின் கடைசி நாளன்று தனது துல்லிய பந்துவீச்சின் மூலம் இந்திய அணிக்கு வெற்றி தேடி கொடுத்தார். 'நான் வீசுகின்ற ஒவ்வொரு பந்தும் தேசத்துக்கானது' என இந்த போட்டி முடிந்ததும் சிராஜ் தெரிவித்தார். இந்த ஆட்டத்தில் ஆட்ட நாயகன் விருதையும் அவர் வென்றிருந்தார்.

5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் மொத்தம் 23 விக்கெட்களை சிராஜ் கைப்பற்றினார். இதன் மூலம் இந்தத் தொடரில் அதிக விக்கெட்களை கைப்பற்றிய பந்து வீச்சாளர் ஆனார். தற்போது 674 புள்ளிகளுடன் டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் 15ஆவது இடத்தை சிராஜ் பிடித்துள்ளார். இந்திய வீரர் பும்ரா இந்த பட்டியலில் முதல் இடத்தில் உள்ளார். மற்றொரு வீரரான பிரசித் கிருஷ்ணா 25 இடங்கள் முன்னேறி இந்த பட்டியலில் 59ஆவது இடத்தை பிடித்துள்ளார்.




ஐ.சி.சி. டெஸ்ட் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் யஷஸ்வி ஜெய்ஸ்வால் 5ஆவது இடத்திலும், ரிஷப் பண்ட் 8ஆவது இடத்திலும் சுப்மன் கில் 13ஆவது இடத்திலும் உள்ளனர். இந்த பட்டியலில் முதல் இரண்டு இடங்களில் இங்கிலாந்தின் ஜோ ரூட் மற்றும் ஹாரி புரூக் ஆகியோர் உள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகவியலாளர்...

முல்லைத்தீவை சேர்ந்த ஊடகவியலாளர் குமணன் போராட்டங்கள், நில ஆக்கிரமிப்பு, மனிதப் புதைகுழிகள் போன்ற விடயங்களை அறிக்கையிடுவதுடன் அவை தொடர்பான ஒளிப்படங்களையும் ஆவணமாக்கி வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குமணன் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டமை தொடர்பில் பலரும் எதிர்ப்புகளைப் பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஓடிக்...

கொண்டிருந்தது. இதையடுத்து அவர் ஓடிக் கொண்டிருந்த ரயிலில் ஏறமுயன்றுள்ளார்.

அப்போது, கால் தடுக்கி யுவதி விழுந்துள்ளார். அப்போது ஒரு கால் ரயிலில் சிக்கிக் கொண்டதில் அது துண்டானது. படுகாயமடைந்த யுவதி யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-05)

## அமெரிக்காவின்...

உரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எங்கள் வர்த்தக இடைவெளியின் அடிப்படையில் எங்களுக்கு 44 வீதம் கிடைக்கிறது. அதுதான், அவர்களின் கொள்கை. அதை 44 வீதத்திலிருந்து 20 வீதமாக குறைப்பது அவர்களுக்கும் எங்களுக்கும் இடையிலான கலந்துரையாடல்கள் - ஒப்பந்தத்தின் ஒரு முக்கியமான விளைவு என்று நாங்கள் நினைக்கிறோம்.

அவர்கள் அதைப் பற்றி எந்த முடிவுகளையும் எடுப்பதற்கு முன் சில எச்.எஸ். கோட்டை விடுவிக்க வேண்டும். இந்த வரி விதிப்பால் பாதிக்கப்பட்ட தொழிலதிபர்கள், தொழில் முனைவோருடன் நாங்கள் கலந்துரையாடினோம். ஒரு குறிப்பிட்ட துறையைத் திறப்பது குறித்து நாங்கள் விவாதித்தபோது சம்பந்தப்பட்ட பங்குதாரர்களை அழைத்து அதன் தாக்கம் குறித்துத் தொடர்ந்து பேசி எங்கள் குழு இந்த வெற்றியைப் பெற்றது. இது ஓர் அறையில் நடந்த சதித்திட்டம் அல்ல. இதில் பங்கேற்கக்கூடிய ஒவ்வொரு பங்குதாரரையும் ஈடுபடுத்த நாங்கள் பொறுப்புடன் செயல்பட்டோம்.

எனவே, அமெரிக்க வரிக் கொள்கையின் அடிப்படையில் பொருளாதார சரிவை நீங்கள் எதிர்பார்த்திருந்தால், அது இப்போது முடிந்துவிட்டது. இன்னும் இறுதி ஒப்பந்தம் இல்லை. எங்களுக்கு 20 வீதம் மட்டுமே இருந்தது. அந்த 20 வீதத்தை விடவும் குறைக்க முடியுமா என்பது தொடர்பில் நாங்கள் இன்னும் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அதற்கான கலந்துரையாடலை தொடங்கியுள்ளோம். இதுவே, ஒரு நாடாக நாம் எடுக்க வேண்டிய முடிவு.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான போருக்குப் பிறகு தொடர்ந்து ஊடகவியலாளர் சந்திப்புகளை நடத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கொழும்பில் குண்டுகள் வீசப்படும் என்று எதிர்பார்த்தனர். அப்போது எங்கள் இராணுவ தளபதி பாகிஸ்தானில் இருந்தார். எதிர்க்கட்சியினர் கொழும்பில் குண்டுகள் வீசப்படும் என்று எதிர்பார்த்தனர். அது ஓர் ஆசை.

பின்னர், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே போர் வெடித்த பிறகு, இப்போது நாடு சரிந்துவிடும் என்று எதிர்பார்த்தனர். அதுவும் நடக்கவில்லை. அடுத்த மிகப்பெரிய எதிர்பார்ப்பு அமெரிக்க வரிக் கொள்கையால் நமது பொருளாதாரம் சரிந்துவிடும் என்பதுதான். நமது பொருளாதாரம் பேரழிவை சந்திக்கும் என்ற கொடூரமான கனவை காண்கிறீர்கள். அந்த அழிவுகரமான கனவு நனவாகாது - என்றும் கூறினார். (ஐ)

# முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகை இரத்து சட்டமூலம் பாராளுமன்றத்தில்

கொழும்பு, ஓக. 08

1986ஆம் ஆண்டு 4ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்து சட்டத்தை இரத்துச் செய்யும் பொருட்டு ஆக்கப்பட்ட சட்டமூலத்தை நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார முதலாம் வாசிப்புக்காக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தார்.

பாராளுமன்றம் நேற்று வியாழக்கிழமை கூடியபோது ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, 1986ஆம் ஆண்டு 4ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்து சட்டத்தை நீக்கும் சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. 1978 (1)ஆம் இலக்க சட்டம் மற்றும் பாராளுமன்ற நிலையியல் கட்டளையின் 52(5) பிரகாரம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் ஏதேனும் ஒரு சட்டமூலம் 7 நாட்களுக்கு பின்னரே முதலாம் வாசிப்புக்காக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த சட்டமூலம் 2025.07.31ஆம் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டது. பிரசுரிக்கப்பட்ட தினத்தை கணக்கில் எடுக்க முடியாது. அவ்வாறாயின், இந்த சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு இன்றுடன் (நேற்று) தான் 7 நாட்கள் நிறைவடைகின்றன. ஆனால், சட்டத்தில் 7 நாட்கள் நிறைவடைந்ததன் பின்னரே முதலாம் வாசிப்புக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, பாராளுமன்ற நிலையியல் கட்டளைக்கு முரணாக செயல்பட வேண்டாம். இந்த சட்டமூலத்தை அடுத்த அமர்வில் முதலாம் வாசிப்புக்கு சமர்ப்பியுங்கள் - என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய நீதி அமைச்சர் 78(1) பிரிவை ஆராயாமல் இந்த சட்டமூலத்தை நாங்கள் கொண்டுவரவில்லை. இந்த சட்டமூலம் 2025.07.31ஆம் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலில் பிரிசுரிக்கப்பட்டது. 30ஆம் திகதி வர்த்தமானி அச்சிடப்பட்டது. 31ஆம் திகதியை ஏன் கணக்கில் எடுக்கக்கூடாது என்பதற்கான உரிய காரணிகள் ஏதும் கிடையாது.

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இந்த சட்டமூலம் 7 நாட்கள் கருத்தாடலுக்கு விடப்பட்டதன் பின்னரே முதலாம் வாசிப்புக்கு சமர்ப்பிக்க பாராளுமன்ற ஒழுங்குபத்திரத்தில் சேர்க்கப்பட்டது என்று குறிப்பிட்டு சட்டமூலத்தை முதலாம் வாசிப்புக்காக சமர்ப்பித்தார். (ஐ)

# தமிழ் புலம்பெயர்ந்தோருக்காக கைதுகள் என்பது நகைச்சுவை!

## ஜனாதிபதி அநுர குமார தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 08

தமிழ் புலம்பெயர்ந்தோரின் ஆதரவால் முன்னாள் கடற்படை தளபதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறும் கருத்துகள் நகைச்சுவைமிக்கவை - இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இதனையும் தெரிவித்தார்.

மேலும், தமிழ் புலம்பெயர்ந்தோரை திருப்திப்படுத்தவே அரசாங்கம் முன்னாள் கடற்படை தளபதி நிஷாந்த உலுகேதென்னவை கைது செய்துள்ளது என்று கூறும் கருத்து முற்றிலும் தவறானது. நீதிமன்ற தீர்ப்பின் மூலமே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளுக்கு அமைய அவருக்கான தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அவரை கைது செய்து தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை திருப்திப்படுத்த அரசாங்கம் செயல்படுவதாகக் கூறுகின்றார்கள்.

நாங்கள் திருப்திப்படுத்துவது நமது நாட்டில் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களையே. அதுவே எங்களின் கடமை. முன்னைய அரசாங்கத்தால் இந்த நீதி மறுக்கப்பட்டது. நீதியைத் தவறாக பயன்படுத்தியவர்களே அவர்கள். அது மக்களுக்கும் தெரியும்.

கோட்டபாய அரசாங்கம் உள்ளிட்ட முன்னைய அரசாங்கங்கள் பயணத் தடைகளை விதித்திருந்தன. இந்த மோசடி கும்பலுக்கு பயந்து நிஷாந்த சில்வா நாட்டை விட்டு உயிரை காப்பாற்றிக் கொள்ள தப்பியோடினார். நீதியின்படி செயல்பட்ட - சட்டத்தை நடைமுறைப்படுத்திய ஷானி அபேசேகர 11 மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால், தற்போது நீதி சரியாக செயல்படுகிறது. நியாயமான தண்டனைகள் வழங்கப்படுகின்றன", என்றார். (ஐ)

## 15 தமிழ்....

நாணயக்கார தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் சிறீதரன் எம்.பி நிலையியல் கட்டளை சட்டத்தின் பிரகாரம் முன்வைத்த கேள்விக்கு நேற்று வியாழக்கிழமை பதிலளிக்கையிலேயே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் சந்தேக நபர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். 4 சந்தேகநபர்கள், 8 தண்டனை பெற்ற கைதிகள் இதில் அடங்குவர். மேலும், ஆயுள் தண்டனை கைதிகள் 3 பேர் - இவர்களில் இருவர் மேன்முறையீடு செய்துள்ளனர். மரண தண்டனை கைதிகள் 2 பேர் வெலிக்கடை , மகசின், மஹர, தும்பர, பூஸா, நீர்கொழும்பு ஆகிய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகள் தமது தண்டனை காலம் நிறைவடைந்த பின்னர் விடுதலையாவார்கள். அல்லது நீதிமன்றத்தின் ஊடாக பிணையளிக்கப்படும் பட்சத்தில் விடுவிக்கப்படுவார்கள் அல்லது மேன்முறையீடு செய்து பிணை பெற்றுக்கொள்ளலாம்.

சிறைக் கைதிகள் விடுதலை தொடர்பில் அரசமைப்பின் 34 ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்படும் ஏற்பாடும் காணப்படுகிறது. தமிழ் அரசியல் கைதிகளில் சுமார் 15 பேர் ஜனாதிபதி பொது மன்னிப்பு தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இந்த விடயம் தொடர்பில் என்னை சிலர் சந்தித்தனர். இந்த விடயத்தில் எனக்கு எந்தவித உத்தரவாதமும் வழங்க முடியாது. ஏனெனில், அது நீதியமைச்சின் விடய தானத்துக்குள் உட்படாது. இந்த விடயம் குறித்து ஜனாதிபதி தீர்மானம் எடுக்க வேண்டும். சாதகமான தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன் - என்றார். (ஐ)

## மன்னார்...

சேர்ந்த சிவில் அமைப்பினர் எடுத்துரைத்தனர்.

இதைத் தொடர்ந்து, இந்தத் திட்டம் தொடர் பில் சகல தரப்பினருடனும் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை எட்டுவது என்றும் அதுவரை இந்தத் திட்டத்தை இடைநிறுத்தி வைப்பது எனவும் மின்சக்தி அமைச்சர் தீர்மானம் எடுத்து அறிவித்தார்.

மேலும், இந்த விவகாரம் தொடர்பில் இரு வாரங்களில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுடன் உரையாடவும் முடிவு எட்டப்பட்டது.

தவிர, காற்றாலை மின் திட்டப் பணிகளுக்காக மன்னார் தீவுக்குள் கொண்டு செல்லப்பட்ட உபகரணங் களை பாதுகாப்பாக பிறிதோர் இடத் தில் வைக்கவும் நடவடிக்கை எடுக்கு மாறு இதன் போது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. (ஐ)

# அராலி விபத்தில் காயமடைந்தவர் மரணமானார்

யாழ்ப்பாணம், ஓக. 08

அராலியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டையை சேர்ந்த கந்தையா ஜெயரத்தினம் (வயது 74) என்பவரே நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு உயிரிழந்தார்.

முதியவர் கடந்த முதலாம் திகதி மில்லில் மிளகாய் திரித்துவிட்டு சைக்கிளில் வீதியில் சென்று கொண்டிருந்தார். அராலி சமுர்த்தி வங்கி அருகே கிளை வீதிக்கு சைக்கிளை திருப்ப முயன்ற போது பின்னர் வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதியது.

இதில், படுகாயமடைந்த முதியவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார்.

இவரின் மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ-05)

## மட்டக்களப்பில்...

இந்தப் போராட்டங்கள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத் தின் மாவட்ட தலைவர்கள் நடத்திய செய்தியாளர் சந்திப்புகளிலேயே இந்த அழைப்பு விடுக்கப் பட்டது. (ஐ)

## சஜித்...

எல்லாவற்றையும் வேண்டாம் என்று சொல்வதுதான் அந்தக் கதாபாத்திரத்தின் தன்மை. இதனால், சஜித் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் வரை திசைகாட்டி அரசாங்கமே இருக்கும் என்று மக்கள் கூறுகிறார்கள்.

நாடு முழுவதும் பல தொழில்துறை விடயங்களை நாங்கள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். முழுவதும் 19 புதிய தொழில்துறை விடயங்களை நாங்கள் ஆரம்பிக்கவுள்ளோம். இவை ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

சுற்றுலா தொழில்கள் அல்லது பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாத - தொழில்களுக்கு ஏற்ற நிலங்களின் பட்டியலை வழங்குமாறு அரசாங்க அதிபர்களிடம் தெரிவித்துள்ளோம்," - என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## 80 மீனவர்கள், 237 படகுகளை விடுவிக்க நடவடிக்கை தேவை

சென்னை, ஒக. 08

இலங்கைக் காவலில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென்று வலியுறுத்தி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு மீண்டும் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தின் விவரம் வருமாறு-இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை முடிவுக்குக் கொண்டுவர ஒன்றிய அரசு தூதரக ரீதியாக தலையிட வேண்டும் என்று தான் பலமுறை வேண்டுகோள் விடுத்த போதிலும், இது போன்ற கைது சம்பவங்கள் தொடர்வது மிகவும். 2025 ஆம் ஆண்டில் மட்டும் நடைபெற்ற கைது சம்பவங்களில், இது 17ஆவது சம்பவம்.

தற்போது, 237 மீன்பிடிப் படகுகளும், 80 மீனவர்களும் இலங்கை அதிகாரிகளின் காவலில் இருப்பதாகவும், மீனவர்கள், அவர்களின் ஒரே வாழ்வாதாரமான பாரம்பரிய நீர்நிலைகளில் மீன்பிடிக்கும் உரிமையை இழந்துள்ளனர் என்பதை வேதனையுடன் சுட்டிக் காட்டுகிறேன்.

எனவே, கைது செய்யப்பட்ட அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிப்பதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுத்திடுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்-என்றுள்ளது. (அ)

# செம்மணி குறித்து சுயாதீன கண்காணிப்பு விசாரணைக்கு இந்தியா உதவவேண்டும்!

### அந்நாட்டு எம்.பி. சசிகாந் செந்தில் வேண்டுகோள்



புதுடில்லி, ஒக. 08

**செம்மணி மனித புதைகுழி குறித்து சுயாதீன சர்வதேச கண்காணிப்புடனான விசாரணைக்கு இந்தியா பரப்புரை செய்யவேண்டும்என இந்திய பாராளுமன்ற உறுப்பினர் சசிகாந் செந்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

செம்மணி மனித புதைகுழி குறித்து இந்திய பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு அனுமதி கோரி பாராளுமன்றத்தின் கீழ்சபையின் செயலாளர் நாயகத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் அதில் தெரிவித்துள்ளதாவது-

இந்திய பாராளுமன்றத்தில் இந்த விவகாரம் குறித்து உரையாற்றுவதற்கான அனுமதியை நான் கோருகின்றேன். எனக்கு அனுமதியளிக்கப்பட்டால் பின்வரும் விடயங்கள் குறித்து நான் பின்வருமாறு குறிப்பிடுவேன்.

இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணியில் சமீபத்தில் மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறித்த தமிழ்நாட்டின் வேதனையை தெரிவிப்பதற்காக நான் இங்கு உரையாற்றுகின்றேன்.

மீட்கப்பட்ட மனித எச்சங்கள், இலங்கையின் தமிழ் சமூகத்தின் நீண்டகாயங்களை மீண்டும் கிளறியுள்ளன. இவற்றில் சில மோதல்களின் போது பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்களின் மனித எச்சங்கள் என்ற கருதப்படுகின்றது.

பல தசாப்தங்களாக இலங்கை தமிழர்கள் திட்டமிடப்பட்ட வன்முறைகள், பலவந்தமாக காணாமலாக்கப்படுதல் போன்றவற்றை எதிர்கொண்டுள்ளனர். அவர்களுக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது.

மனித படுகுழி என்பது வெறுமனே ஒரு தடயவியல் இடம் மாத்திரமில்லை.இது மறைக்கப்பட்ட உண்மை தாமதிக்கப்பட்ட நீதிக்கான ஒரு குறியீடு.

ஈழத்தமிழர்களுடன் கலாசார, மொழி உறவுகளை பகிர்ந்து கொண்டுள்ள தமிழகமக்கள் தொடர்ந்தும் அலட்சியமாக இருக்க முடியாது.

இந்திய அரசாங்கம் உடனடியாக இந்த விடயத்தை இராஜதந்திர வட்டாரங்கள் ஊடாக அணுக வேண்டும், இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கத்திடமிருந்து முழுமையான வெளிப்படை தன்மையை கோரவேண்டும்.

செம்மணி மனித புதைகுழி குறித்து சுயாதீன சர்வதேச கண்காணிப்புடனான விசாரணைக்கு இந்தியா பரப்புரை செய்யவேண்டும்.

நீதி நல்லிணக்கம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளிற்கான தனது நீண்டகால நிலைப்பாட்டை இந்தியா மீள வலியுறுத்தவேண்டும்.

இந்தியா வெறுமனே பிராந்திய ஒத்துழைப்பு குறித்து மாத்திரம் குரல்கொடுக்க முடியாது, எல்லைகளிற்கு அப்பால் தமிழ் மக்களின் கௌரவம் உண்மை நீதிக்காகவும் குரல் கொடுக்கவேண்டும்-என்றுள்ளது. (அ)

# முக்கிய சட்டமூலங்களை ஒகஸ்ட் 19 விவாதிக்க முடிவு



கொழும்பு, ஒக. 08

ஒகஸ்ட் 19 முதல் 22 வரை பாராளுமன்றம் கூடும் என்றும், சூதாட்ட ஒழுங்குமுறை ஆணைக்குழு சட்டமூலம் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் வரும் பாராளுமன்ற வாரத்தில் விவாதிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

ஒகஸ்ட் 19, செவ்வாய்க்கிழமை, காலை 11:30 மணி முதல் மாலை 5:00 மணி வரை, சூதாட்ட ஒழுங்குமுறை ஆணைக்குழு சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு, பொதுக் கடன் முகாமை சட்டத்தின் கீழ் உள்ள விதிமுறைகள் மற்றும் அந்நியச் செலாவணிச் சட்டத்தின் கீழ் உள்ள உத்தரவுகள் மீதான விவாதங்களுடன் எடுத்துக் கொள்ளப்படும். அதைத் தொடர்ந்து அரசாங்க ஒத்திவைப்பு தீர்மானம் ஒன்று தாக்கல் செய்யப்படும்.

ஒகஸ்ட் 20 புதன்கிழமை நடைபெறும் விவாதங்களில் சமுர்த்தி (திருத்தம்) சட்டமூலம் மற்றும் ரப்பர் கட்டுப்பாடு (திருத்தம்) சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்புகள், விளையாட்டுச் சட்டம் மற்றும் நீதித்துறைச் சட்டத்தின் கீழ் உள்ள விதிமுறைகள் ஆகியவை அடங்கும். ஒத்திவைப்பு நேரத்தில் கேள்விகளுக்கும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் 21, வியாழக்கிழமை, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு தீர்மானத்தையும், கலால் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், நிதிச் சட்டம் மற்றும் கட்டுமானத் தொழில் அபிவிருத்தி சட்டத்தின் கீழ் பல விதிமுறைகளையும் பாராளுமன்றம் பரிசீலிக்கும். அரசாங்க ஒத்திவைப்பு தீர்மானம் மூலம் அன்றைய நடவடிக்கைகள் முடிவடையும்.

ஜூலை 24 அன்று நடைபெற்ற முந்தைய குழுக் கூட்டத்தின் போது எதிர்க்கட்சிகள் கோரிய ஒத்திவைப்பு விவாதத்திற்கு ஒகஸ்ட் 22 வெள்ளிக்கிழமை வழங்கப்படும். இந்த விவாதம் காலை 11:30 மணி முதல் மாலை 5:30 மணி வரை நடைபெறும். (அ)

## 1,139 சிறப்பு மருத்துவர்களுக்கு நாடு முழுவதும் பற்றாக்குறை!

கொழும்பு, ஒக. 08

நாடு முழுவதும் 1,139 சிறப்பு மருத்துவர்களுக்கு பற்றாக்குறை இருப்பதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சிறப்பு மருத்துவர்களின் சேவைகள் கிடைக்க வேண்டிய 134 இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் சிறப்பு பராமரிப்பு மருத்துவமனைகளில் 2042 சிறப்பு மருத்துவர்கள் மட்டுமே இருப்பதாக அவர் கூறினார்.

ஓய்வு, பதவி விலகல் மற்றும் சேவைகளை வெற்றிடமாக்குதல் போன்ற பல்வேறு காரணங்களால் நாடு 570 சிறப்பு மருத்துவர்களின் சேவைகளை இழந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

2020 முதல் 2024ஆம் ஆண்டுக்குள் நாட்டில் 233 சிறப்பு மருத்துவர்கள் ஓய்வு பெற்றுள்ளனர். 82 பேர் சேவைகளை வெற்றிடமாக்கியுள்ளனர். மேலும், 7 பேர் பதவி விலகியுள்ளனர். 57 பேர் பல்வேறு தேவைகளுக்காக பிற நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 191 சிறப்பு மருத்துவர்கள் சம்பளமில்லா விடுப்பில் சென்றுள்ளனர் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தற்போது இருக்கும் சிறப்பு மருத்துவர்களில் 201 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் எனவும் 546 பேர் 55 முதல் 60 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

## வடக்கில் நான்கு மாவட்டங்களில் வெப்பம் எச்சரிக்கை மட்டத்தில்!

கொழும்பு, ஒக. 08

வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு "அவதானமாக இருக்கவும்" நிலையை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, அந்த மாவட்டங்களின் சில பகுதிகளில், மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை, "எச்சரிக்கை" மட்டத்தில் இருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உடலில் உணரப்படும் வெப்பநிலையை, வெப்ப குறியீடு குறிக்கிறது.

இது, சுற்றுப்புற வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தின் அடிப்படையில், மனித உடல் எவ்வளவு வெப்பமாக உணரும் என்பதை மதிப்பிடுகிறது.

இது அதிகபட்ச வளிமண்டல வெப்பநிலை அல்ல எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மருத்துவர் சங்க வேலைநிறுத்த அறிவிப்பு சுகாதார சேவைகளில் நெருக்கடி ஏற்படும்

கொழும்பு, ஒக. 08

நாட்டின் கிராமப்புற மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில் அத்தியாவசிய சுகாதார சேவைகளை வழங்குவதில் ஏற்பட்டுள்ள சவால்கள் காரணமாக, அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8 மணி முதல் நாடு தழுவிய வேலைநிறுத்தத்தை அறிவித்துள்ளது. அவசர சிகிச்சை சேவைகள் தொடர்ந்து வழங்கப்படும் என்றாலும், தினசரி மருத்துவமனை சேவைகள் கடுமையாக பாதிக்கப்படலாம் என சங்கம் எச்சரித்துள்ளது.

மருத்துவத் துறையில் நிலவும் பல பிரச்னைகளை சுட்டிக்காட்டிய சங்கம், 2021-ல் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத இடமாற்றங்களால் ஏராளமான மருத்துவர்கள் பணியிடங்களில் இருந்து தவறாக நீக்கப்பட்டதாகவும், காலியிடப் பட்டியல்கள் தவறாக தயாரிக்கப்பட்டு, இல்லாத பிரிவுகளுக்கு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டதாகவும் குற்றம்சாட்டியுள்ளது.

சமமான தரமான சுகாதார சேவைகள் இல்லாததால் மருத்துவர்களை பணியமர்த்துவதில் பெரும் சிக்கல் எழுந்துள்ளதாகவும், இடமாற்ற செயல்முறை வெளிப்படையாகவும் திறமையாகவும் இருக்கவேண்டும் என்றும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பிரச்னைகள் உடனடியாக தீர்க்கப்படாவிட்டால், மருத்துவ தொழிற்சங்கங்கள் கடுமையான நடவடிக்கைகளுக்கு தயாராக உள்ளதாகவும், சம்பந்தப்பட்ட அமைச்சர் உடனடியாக செயல்பட வேண்டும் என்றும் சங்கம் எச்சரித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org